www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 2024 - 2025

# 11ஆம் வகுப்பு

## தமிழ் குறைந்தபட்சக் கற்றல் கையேடு

## 11th Tamil Minimum Learning Material








**Prepared by**

**S.ARAVIND**

**TAMIL PG TEACHER**

**CHENNAI**

**CONTACT : 7358010037**






Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## பகுதி 1

14 x 1 = 14

ஒரு மதிப்பெண் வினாக்கள் , புத்தக இயல் பயிற்சிக் கேள்விகளில் ( Book Back) 7 கேள்விகள் விகிதம் கேட்கப்படும். புத்தகப் பாட உள்பகுதியிலிருந்து தோராயமாக 7 கேள்விகள் கேட்கப்படும். பின் வரும் Book Back கேள்விகளை நன்குப் படித்தால் 7 மதிப்பெண் பெற முடியும்.

1) தவறான இணையைத் தேர்வு செய்க.

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் **ஆ) கடல் + அலை - உயிர் + மெய்**

இ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் ஈ) மண் + வளம் - மெய் + மெய்

2) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர்

அ) கலைஞர் ஆ)அண்ணா இ) காமராஜர் ஈ) கக்கன்

3) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

அ) ஜீவானந்தம் ஆ) சிங்காரவேலர் **இ) திரு.வி.கலியாணசுந்தரனார்** ஈ) மு.வ.

4) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர்

**அ) பாரதிதாசன்** ஆ) பாரதியார் இ) க.சச்சிதானந்தன் ஈ) பாவாணர்

5) பொதுவுடைமைக் கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர்

அ) திரு.வி.க. ஆ) நாவலர் நாட்டார் **இ) ஜீவா** ஈ) பெரியார்

5.1 பொருத்துக:

அ) அடி அகரம் ஐஆதல் - 1) செங்கதிர்

ஆ) முன்நின்ற மெய் திரிதல் - 2) பெருங்கொடை

இ) ஆதி நீடல் - 3) பைங்கூழ்

ஈ) இனமிகல் - 4) காரிருள்"

i) அ- 4 ஆ-3 இ-1 ஈ-2 ii) அ- 4 ஆ-3 இ-2 ஈ-1

**iii) அ- 3 ஆ-1 இ-4 ஈ-2** iv) அ- 3 ஆ-4 இ-2 ஈ-1

"6) பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.

அ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்

இ) சு.வில்வரத்தினம் - ஆறாம்திணை ஈ) இந்திரன்-பேச்சுமொழியும் கவிதை மொழியும்"

i) அ.ஆ ii) அ, ஈ **iii) ஆ, ஈ** iv) அ, இ

7) "கபாடபுரங்களைக் காவுகொண்டபின்னும்
காலத்தால் சாகாத தொல்கனிமங்கள்"- அடி மோனையைத் தெரிவு செய்க."

அ) கபாடபுரங்களை-காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்

**இ) கபாடபுரங்களை - காலத்தால்** ஈ) காலத்தால் - சாகாத

8) பாயிரம் இல்லது ____________ அன்றே.

அ) காவியம் **ஆ) பனுவல்** இ) பாடல் ஈ) கவிதை

9) ஒரு திரவநிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது, இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.

ஆ) பேச்சுமொழி, எழுத்து மொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

**இ) எழுத்து மொழியைவிட பேச்சுமொழி எளிமையானது.**

ஈ) பேச்சுமொழியைக் காட்டிலும், எழுத்து மொழி எளிமையானது.

10) மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

**அ) அன்னம், கிண்ணம்** ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

"11) கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும்போது 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்' என்னும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இஈஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப் பெயர்ப்புணர்ச்சியில் 'ஈறு போதல்' என்னும் விதியே முதன்மையாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும் ."


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

i) அ, ஆ, இ சரி, ஈ தவறு

**ii) அ, இ, ஈ சரி, ஆ தவறு**

iii) அ, ஆ,ஈ சரி, இ தவறு

iv) அனைத்தும் சரி

12) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதிலிக் குருவிகள்-மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

**இ) யானை டாக்டர் - குறும்புதினம்** ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

13) மண்ணுக்கு வளம் சேர்ப்பன__________

அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் **ஈ) இவை மூன்றும்**

14) "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

அ) வானம் இடிந்தது **ஆ) மழை பெய்யவில்லை**

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது.

15) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை

அ) மதிப்புக்கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்"

**i) அ- மட்டும் சரி**

ii) ஆ- மட்டும் சரி

iii) இரண்டும் சரி

iv) அ-தவறு, ஆ-சரி

16) பிழையான தொடரைக் கண்டறிக.

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

**இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.**

ஈ) யானைகளால் வெகுதொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

17) பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க

அ) அன் - வந்தனன் **ஆ) இன் - முறிந்தது** இ) கு - காண்குவன் ஈ) அன் - சென்றன

18) கூற்று- ""கோடு"" என்பது தமிழ்ச் சொல் ஆகும்.

விளக்கம்-கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு."

அ) கூற்று சரி, விளக்கம் தவறு **ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி**

இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

19) காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் **ஆ) அண்ணாமலையார்** இ)முருகன் ஈ) பாரதியார்

19) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா
3. வாடிவாசல் - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து"

i) அ ஆ இ ஈ

ii) ஆ ஈ அ இ

**iii) இ ஈ ஆ அ**

iv) இ ஈ அ ஆ

20) "இனிதென "-இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.

**அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்,

ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

21) பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?


அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம் **ஈ) பகுதி, விகுதி**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

22) படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.
ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.
**இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**
ஈ) சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

23) துன்பப்படுவர் ________

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர் **ஈ) நாவைக் காக்காதவர்**

24) பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்."

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.
**ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**
இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.
ஈ) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

25) கீழ்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.

பூக்களும் முட்களுக்கும் இடையில்
புழுங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நடுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன
வெளியில் குண்டுகளும்
வீட்டில் சண்டைகளும்
ஆசை அறுத்தல் எளிதல்ல
முயன்று பார்க்கலாம் வா !

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்
ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துக் பெயின்
**இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்**
ஈ) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

26) ஒப்புரவு என்பதன் பொருள்

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

27) பொருத்துக.

அ) வாழ்பவன் - 1) காத்திருப்பவன்
ஆ) வாழாதவன் - 2) ஒத்ததறிபவன்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

இ) வெல்ல நினைப்பவன் - 3) மருந்தாகும் மரமானவன்

ஈ) பெரும் பண்புடையவன் - 4) இசையொழித்தவன்

i) அ- 4 ஆ-3 இ-1 ஈ-2

**ii) அ- 2 ஆ-4 இ-1 ஈ-3**

iii) அ- 3 ஆ-1 இ-4 ஈ-2

iv) அ- 3 ஆ-4 இ-2 ஈ-1

28) இலக்கணக்குறிப்புத் தருக : சுடசுடரும்

அ) வினையாலணையும் பெயர் ஆ) அடுக்குத்தொடர்

**இ) மூன்றாம் வேற்றுமைத் தொகை** ஈ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை

29) இலக்கணக்குறிப்புத் தருக : சுடசுடரும்பொன் -

அ) நான்காம் வேற்றுமைத் தொடர் ஆ) ஆறாம் வேற்றுமை விரி

இ) உரிச்சொற்றொடர் **ஈ) எதிர்காலப் பெயரெச்சத் தொடர்**

30) இலக்கணக்குறிப்புத் தருக : சுடச்சுட

**அ) அடுக்குத் தொடர்** ஆ) வினையெச்சம் இ) இரட்டைக் கிளவி ஈ) பண்புப்பெயர்

31) விரைந்து கெடுபவன் யார்?

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்.

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

**ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்**

32) வேளாண்மை செய்தற் பொருட்டு - பொருள் கூறுக.

அ) பிறருக்கு உபத்தரம் செய்வதற்கு **ஆ) பிறருக்கு உதவி செய்தற்கு**

இ) பிறருக்குத் தீங்கு செய்வதற்கு ஈ) பிறருக்குக் கெடுதல் செய்வதற்கு

33) பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது

அ) பற்றுகள் பெருகும் - பொருள்களின் இன்பம் பெருகும்

ஆ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்

**இ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்**

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் - பற்றுகள் பெருகும்.

34) அருவினை - எந்த விதி மூலம் புணர்ந்தது.

அ) முன்னின்ற மெய் திரிதல்

ஆ) இனமிகல்

**இ) ஈறுபோதல்**

ஈ) அடிஅகரம் ஐ ஆதல்

35) ஒட்டுப்போடாத ஆகாயம்போல - இந்த உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவத

**அ) உவமை**

ஆ) உருவகம்

இ) உள்ளுறை

ஈ) இறைச்சி

"35.1) சரியான விடையைத் தேர்க.

அ) கல்வி அழகே அழகு - 1) தொல்காப்பியம்

ஆ) இளமையில் கல் - 2) திருமந்திரம்

இ) துணையாய் வருவது தூய நற்கல்வி - 3) ஆத்திசூடி

ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4) திருக்குறள்

5) நாலடியார்"

i) அ- 5 ஆ-3 இ-1 ஈ-2

ii) அ- 2 ஆ-4 இ-1 ஈ-3

iii) அ- 3 ஆ-5 இ-4 ஈ-2

**iv) அ- 5 ஆ-3 இ- 2 ஈ- 1**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

36) கீழ்க்காண்பவற்றுள் 'இறைச்சி பற்றிய கூற்றைத் தேர்க.

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்.

ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.

இ) வினை, பயன் வடிவம் ,நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.

**ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப்பொருள்.**

37) ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய செற்கள் தரும் பொருள்________என்பதாகும்.

**அ) நூல்** ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

38) 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ..............

**அ) நற்றிணை** ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

39) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை .......

அ) 9 ஆ) 3 **இ) 27** ஈ) 13

40) நிழல்போலத் தொடர்ந்தான்- இது எவ்வகை உவமை?

**அ) வினை** ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

40.1) பொருத்துக

அ) நேரிசை ஆசிரியப்பா - 1) முதலடியும் இறுதியடியும் அளவடிகளாய் வரும்

ஆ) இணைகுறள் ஆசிரியப்பா - 2) அடிகளை மாற்றினாலும் ஓசையும் பொருளும் மாறாது

இ) நிலைமண்டில ஆசிரியப்பா - 3) இறுதி அடியின் முந்தைய அடி சிந்தடியாய் வரும்

ஈ) அடிமறிமண்டில ஆசிரியப்பா - 4) எல்லா அடிகளும் அளவடி பெற்று வரும்"

i) அ- 4 ஆ-3 இ-1 ஈ-2

ii) அ- 2 ஆ-4 இ-1 ஈ-3

**iii) அ- 3 ஆ-1 இ-4 ஈ-2**

iv) அ- 3 ஆ-4 இ-2 ஈ-1

"41) பொருந்தாததைத் தேர்க.

அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன

ஆ) ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்

இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது

ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன "

i) அ, ஆ ii) ஆ, இ iii) அ, இ **iv) ஆ, ஈ**

42) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?

அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி **ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை**

43) உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு

**அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி** ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

44) சரியானதைத் தேர்ந்தெடுக்க.

அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம் இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்

**i) அ, ஆ, இ - சரி; ஈ-தவறு**

ii) ஆ, இ, ஈ - சரி; அ-தவறு

iii) அ, இ, ஈ - சரி; ஆ-தவறு

iv) அ, ஆ, ஈ - சரி: இ-தவறு

45) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது

அ) காய் முன் நேர்

ஆ) காய் முன் நிரை


இ) கனி முன் நிரை

**ஈ) மா முன் நேர்**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

46) படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



**அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை**

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்

ஈ) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

47) கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.

கொடி தவித்ததைப் பாரி
அறிந்துகொண்டான்
மயில் தவித்ததைப் பேகன்
உணர்ந்துகொண்டான்
பிள்ளையின் பரிதவிப்பைத்
தாய் அறிவாள்
பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்
அப்படிப் படித்தவர்களைப்
பிடித்துக்கொள்.

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

**ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்**

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

ஈ) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

48) மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ______________ நினை.

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
**இ) மறதியால் கெட்டவர்களை** ஈ) சொல்லேர் உழவரை

49) ஏமம் - பொருள் கூறுக.

அ) பூ ஆ) அன்பு **இ) பாதுகாப்பு** ஈ) வெறுப்பு

50) மருந்துழைச் செல்வான் - பொருள் கூறுக.

அ) மருத்துவர் **ஆ) மருந்தாளுநர்** இ) நோயாளி ஈ) சாப்பிடுபவர்

51) இலக்கணக்குறிப்புத் தருக - கெடுக

அ) வினையாலணையும் பெயர் ஆ) வினையச்சம்
**இ) வியங்கோல் வினைமுற்று** ஈ) குறிப்புப் பெயரெச்சம்

52) இலக்கணக்குறிப்புத் தருக - குறிப்புணர்வார்

அ) வினைத்தொகை ஆ) அன்மொழித் தொடர்
**இ) வினையாலணையும் பெயர்** ஈ) குறிப்பு வினையெச்சம்

53) கூற்று 1 : தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்
கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு
இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி **ஈ) கூற்று இரண்டும் சரி**

54) 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது.

**அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி** ஆ) கவிதைநூல், திருச்சாழல்
இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

54) கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க

அ) விரியன் - 1) தண்டை

ஆ) திருகுமுருகு - 2) காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - 3) சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - 4) பாடகம்

i) 3 4 2 1

**ii) 3 1 4 2**

iii) 4 3 2 1

iv) 4 1 3 2

55) பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

**அ) சாழல்** ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

56) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்

அ) மூதூர் ஆ) வெற்றிடம் **இ) நல்லாடை** ஈ) பைந்தளிர்

57) 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை **இ) மக்கள் வெள்ளம்** ஈ) மக்கள் அவை

58) கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து. புறம் சார்ந்த நூல்.
காரணம்: சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.

அ) கூற்று சரி; காரணம் தவறு **ஆ) இரண்டும் சரி**

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு: காரணம் சரி

59) 'அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்' - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

**இ) அமைச்சர் மன்னரிடம்** ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

60) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்

அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்

இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில் **ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்**

61) ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாள் **ஈ) ஆசிரியர்**

62) பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே______ என்று தமிழில் வழங்கப்படும்.

**அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு** ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி

63) கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு

அ) பெயர்மரபு **ஆ) வினைமரபு** இ) ஒலிமரபு ஈ) இவை மூன்றும்

64) யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?

அ) வாய்க்கால் ஆ) நாங்கூழ் **இ) நடராசன்** ஈ) புல்

65) தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்

அ) இரகசியவழி **ஆ) மனோன்மணீயம்** இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

66) சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

**ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.**

இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

பகுதி - II

பிரிவு - 1

3 x 2 = 6

**1) 'என் அம்மை, ஒற்றியெடுத்த**
**நெற்றிமண் அழகே**
**வழிவழி நினதடி தொழுதவர்**
**உழுதவர், விதைத்தவர்**
**வியர்த்தவர்க்கெல்லாம்**
**நிறைமணி தந்தவளே!' - இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

வினையாலணையும் பெயர்கள் :

1. தொழுதவர்
2. உழுதவர்
3. விதைத்தவர்
4. வியர்த்தவர்
5. தந்தவள்

**2) இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.**

"தன் இனத்தையும், மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் ; கூடில்லாத பறவை" என்று இரசூல் கம்சதோவ் குறிப்பிடுகிறார்.

**3) 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?**

நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பு,
நூல் வழங்கும் கருத்து வளம்
இவற்றை நூல் தொடக்கத்தில் எப்படி வைக்கவேண்டும் என்று கூறுவது பாயிரம்.

**4) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?**

* மரங்கள் வெட்டப்பட்டன
* மழை பெய்யவில்லை
* மண் வளம் குன்றியது
* இயற்கைச் சூழல் மாறிவிட்டது.

அதனால் இருக்க இடமும் உணவும் இல்லாமல் **ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின.**

**5) வளருங் காவில் முகில்தொகை ஏறும்' - பொன்**
**மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?**

தென்கரை நாட்டுச்சோலையில் உயர்ந்து வளரும் மரங்களின் மீது மேகங்கள் கூட்டமாகத் தங்கும் என்பதே 'காவில் முகில்தொகை ஏறும்' என்ற தொடரின் பொருளாகும்.

**6) காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?**

காற்றின் தீராத பக்கங்களில் சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று, ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது.

**7) காவடிச்சிந்து என்பது யாது?**

தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கில் உள்ள இசைமரபே காவடிச்சிந்து ஆகும்

**8) குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

* எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
* 401 பாடல்களைக் கொண்டது
* "நல்ல குறுந்தொகை" என்று அழைக்கப்படும்
* தொகுத்தவர் பூரிக்கோ

**9) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?**

* தமிழர்கள் புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்.
* பழி வரும் என்றால் உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

**10) தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?**

* தீயினால் சுட்டது வெளியே தெரியும் உள்ளே ஆறிவிடும். ஆனால்,
* நாவினால் சுட்டது வெளியே தெரியாது உள்ளே ஆறாமல் வடுவாக இருக்கும்.
* எனவே தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுகிறது.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**11) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின். - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

* உவமை : மருந்து மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுதல்.
* உவமேயம் : பெருந்தகையாளனிடம் சேர்ந்த எல்லாச் செல்வமும் பலருக்குப் பயன்படும்.
* பொருத்தம் : மருந்து மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுதல் போல் பெருந்தகையாளனிடம் சேர்ந்த எல்லாச் செல்வமும் பலருக்குப் பயன்படும்.

**12) எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது?**

நாவடைத்துப் போய் விக்கல் வந்து இறப்பதற்கு முன், செய்ய வேண்டிய நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்று குறள் கூறுகிறது

**13) சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?**

செயலின் வலிமை, தன் வலிமை, பகைவலிமை, துணைசெய்வார் வலிமை ஆகியன சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் ஆகும்.

**14) மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?**

* மருந்து :- செல்வம்
* மருந்து மரமாக இருப்பவர் :- பெருந்தகையாளர்.

**15) இங்கே ஐம்பதாண்டு வேம்பு**
**கோடையில் கொட்டும் பூக்களை**
**எண்ணச் சொல்கிறார்கள்-எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?**

* எண்ணச் சொல்கிறவர்கள் - ஆசிரியர்கள்.
* பூக்களை எண்ணுபவர்கள் - மாணவர்கள்.

**16) "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்**
**தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்"- இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?**

காய்த்தது : வெற்றியும், ஊக்கமும்.
பழுத்தது : செல்வம்.

**17) மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.**

* மதீனா நகரின் மேல்மாடங்கள் மேருமலை போல் உயர்ந்திருந்தன
* மதீனா நகரின் மக்கள் ஆரவாரம், பெருங்கடல் ஒலி போல் இருந்தது.
* மதீனா நகரின் வீதிகள் பிரபஞ்சம் போல் பரந்து விரிந்திருந்தன.
* மதீனா நகரின் பெரிய மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

அதனால், மதீனா நகரம் ஒரு "மாளிகை நகரம்" ஆகும்.

**18) மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?**

* நோயாளி,
* மருத்துவர்,
* மருந்து,
* மருத்துவ உதவியாளர்

**19) படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?**

* வீரம்,
* மானம்,
* முன்னோர்வழி நடத்தல்,
* நம்பிக்கைக்கு உரியவராதல்

**20) பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிடவேண்டும் என்னும் குறட்பாவைக் கூறுக.**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

**21) எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?**

"முன் உண்டது செரித்த பின் உண்டால், மருந்து என ஒன்று தேவையில்லை" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**22) உழைப்பாளர்களின் தோள்வலிமையால் விளைந்தன யாவை?**

உழைப்பாளர்கள் தங்கள் தோள்வலிமையால்,

* பாழ்நிலத்தைப் பண்படுத்தினர்.
* அழகு நகர்களையும் சிற்றூர்களையும் அமைத்தனர்.
* வரப்புடைய வயல்களை அமைத்தனர்,
* ஆற்று நீரைத் தேக்கி வைக்க வாய்க்கால்களை அமைத்தனர்.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

23) **செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் எழுதுக.**
* பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகளைக் கூறுவது , "பாடாண்" எனப்படும்
* உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல், செந்துறை ஆகும் .
* இது செந்துறைப் பாடாண்பாட்டு எனப்படும்.

24) **ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**
ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி நாங்கூழ்ப்புழுவைக் குறிப்பிடுகிறது.

25) **"கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?**
தாளில் எழுதி இருப்பதை மனப்பாடம் செய்வதே கல்வி என்னும் மாயையில் வாழும் மக்களிடம் "கற்றேன் என்பாய் கற்றாயா?" என்று அப்துல்ரகுமான் கேட்கிறார்.

## பகுதி - II

### பிரிவு – 2 2 x 2 = 4

1) **பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**
* எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி **உணர்ச்சிக்கு** மிக அருகில் இருக்கிறது.
* எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
* அதனால்தான் **பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக** உள்ளது.

2) **தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறு குறிப்பு வரைக.**
* தமிழ்நாட்டின் மாநில மரம், பனைமரம் ஆகும்.
* இது ஏழைகளின் கற்பக விருட்சம்.
* சிறந்த காற்றுத் தடுப்பான்.
* ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மையுடையது.

3) **"கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**

| | | |
|---|---|---|
| தமிழ் | : | கோட்டை, கோடு |
| மலையாளம் | : | கோட்ட, கோடு |
| கன்னடம் | : | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | : | கோட்ட |
| துளு | : | கோட்டே |
| தோடா | : | க்வாட் |

3.1. **"வரை" என்னும் சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை ?**
'வரை' என்ற சொல் கோடு, மலை, சிகரம், கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது.

4) **சங்க காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?**
"சங்க காலத்தில் தமிழகத்தில் தமிழ்
* **ஆட்சி** மொழியாக,
* **பயிற்று** மொழியாக,
* **இலக்கிய** மொழியாக விளங்கியுள்ளது ;

மேலும் தமிழ் மொழியே,
* **சமயம்**,
* **வாணிகம்** போன்ற எல்லாத் துறைகளிலும் பொது மொழியாகவும் விளங்கியது"

இதுவே , சங்க காலத்தில் தமிழ் மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று ஆகும்.

5) **உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்வி முறை குறித்துக் குறிப்பு வரைக.**
* **மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரிடம்** தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர் **உயர்நிலைக் கல்விமுறையில்** பாடம் பயின்றார்.
* இந்த உயர்நிலைக் கல்விமுறையானது , **தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும்முறை** ஆகும்.

6) **ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**
* "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்து போல,
* மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போல,
* நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போல,
* தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்; அதைக் காகிதத்தில் எழுத முடியாது"

இது ஆனந்தரங்கரின் வருணனைத் திறனக்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**7) இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?**

* நாகரம்,
* வேசரம்,
* திராவிடம்

**8) ஒலோக மாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?**

**கோவில் கல்வெட்டில் இருக்கும் பெண் அதிகாரிகள் பெயர் :**

* எருதந் குஞ்சர மல்லி
* சோமயன் அமிர்தவல்லி

**அறியப்படும் செய்தி :** ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெண்கள், அதிகாரிகளாகப் பணிபுரிந்துள்ளனர்.

**9) 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.**

* 'வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' போல், ஜீவானந்தம் மேடைப்பேச்சு இருக்கும்.
* ஜீவானந்தம் இரண்டு கைப்பிடி விஷயத்துடன் மேடை ஏறுவார். வெடிமருந்துக்கு நெருப்பு வைத்ததும், பச்சை, மஞ்சள், சிவப்பு எனக் குடைகுடையாய் உதிர்வதுபோல், மாலை மாலையாய் இறங்கி வரும் கருத்து வண்ணஜாலம் அறிந்தவர் ஜீவா.

**10) நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**

* நாட்டுப்புறங்களில் இருக்கும் போது, எல்லாவற்றையும் விழுங்கவல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.
* பட்டணத்திலோ, மனித சமுதாயம்தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது.

**பிரிவு - 3** **7 x 2 = 14**

**1) உயிரெழுத்து பன்னிரண்டு திருக்குறள், நாலடியார்- இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன? (B.B)**

* உயிரெழுத்து - உயிர் + எழுத்து - மெய்யீறு , குற்றியலுகர ஈறு (து)
* பன்னிரண்டு - பத்து + இரண்டு - உயிரீறு , குற்றியலுகர ஈறு ( டு )
* திருக்குறள் - திரு + குறள் - உயிரீறு , மெய்யெழுத்து ஈறு (ள்)
* நாலடியார் - நான்கு + அடியார் - உயிரீறு , மெய்யெழுத்து ஈறு (ர்)

**2) மொழி முதலில் வரும் எழுத்துகள் எத்தனை ? அவை யாவை ?**

மொழி முதலில் வரும் எழுத்துகள்- 22

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழி முதலில் வரும்.

எடு - அணில், ஆடு, எலி, ஓலை

க,ச,த,ப,ங,ஞ,ந,ம,ய,வ ஆகியன சொல்லின் முதலில் வரும்.

எடு - கடல், சட்டை

**3) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை ? அவை யாவை ?**

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் - 24

உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு இறுதியில் வரும்.

எடு - மலை , குருவி

ஞ்,ண்,ந்,ம்,ன்,ய்,ர்,ல்,வ்,ழ்,ள் ஆகியன மொழிக்கு இறுதியில் வரும்.

எடு - கண், தேன்

குற்றியலுகரம் மொழிக்கு இறுதியில் வரும்.

எடு - வீடு, காசு

**4) உயிரீறு மெய்யீறு - விளக்குக.**

உயிரீறு : நிலைமொழியின் இறுதியில் உயிரெழுத்து வருவது உயிரீறு.

எ-கா :திரு + புகழ் - உயிரீறு

மெய்யீறு : நிலைமொழியின் இறுதியில் மெய்யெழுத்து வருவது மெய்யீறு.

எ-கா : மண் + உடை - மெய்யீறு



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**5) உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

உயிர்முதல் : வருமொழியின் முதலில் உயிரெழுத்து வருவது உயிர்முதல்.

எ-கா : புவி + ஆட்சி - உயிர்முதல்

மெய்ம்முதல் : வருமொழியின் முதலில் மெய்யெழுத்து வருவது மெய்ம்முதல்.

எ-கா : மணி + குலம் - மெய்ம்முதல்

**6) உவமை, உருவகம் வேறுபடுத்துக.**

* தாமரை போலும் முகம் என்ற உவமை செறிவாக்கப்பட்டு முகத்தாமரை என உருவகத்தை உருவாக்குகிறது.
* உவமையை விட உருவகம் ஆழமானது.
* உவமை அணியில் உவமானமும், உவமேயமும் வேறுவேறானவை .
* உருவகத்தில் இரண்டும் ஒன்றே என்ற உணர்வு கிடைக்கிறது.

**7) ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

அவை

நேரிசை ஆசிரியப்பா,
இணைக்குறள் ஆசிரியப்பா,
நிலைமண்டில ஆசிரியப்பா,
அடிமறிமண்டில ஆசிரியப்பா

என்பனவாகும்.

**8) ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?**

ஆசிரியப்பாவிற்குரிய சீர் : இயற்சீர் (ஆசிரிய உரிச்சீர்)

ஆசிரியப்பாவிற்குரிய தளைகள் :

நேரொன்றாசிரியத் தளை,
நிரையொன்றாசிரியத் தளை என்பனவாகும்.

**9) கலைச்சொல்லாக்கம் பொருள் தருக.**

ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்கள், 'கலைச்சொற்கள்' எனப்படும். அந்தக் கலைச்சொற்களை உருவாக்குவது கலைச்சொல்லாக்கம் எனப்படும்.

எடு : Smartphone - திறன்பேசி

**10) பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுது**

**Personality, Emotion, Plastic, Escalator, Apartment, Straw , Mass Drill, Horticulture, Average**

| | |
|---|---|
| Personality - ஆளுமை | Straw - உறிஞ்சுகுழல் |
| Emotion - உணர்ச்சி, | Mass Drill - கூட்டு உடற்பயிற்சி |
| Plastic - நெகிழி, | Horticulture - தோட்டக்கலை |
| Escalator - நகரும் மின்படி, | Average - சராசரி |
| Apartment - அடுக்ககம் | |

**11) SHIP என்னும் ஆங்கிலச் சொல்லின் பழந்தமிழ் இலக்கியப் பெயரைக் கூறுக.**

நாவாய்

**12) அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக:**

1) வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) - **உளவாளி**

2) அறிவைத் தேடிப் போகுமிடம் உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - **நூலகம்**

3) வந்தால் மகிழ்ச்சி இது உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - **வருமானம்**

4) வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி பட்டம் வாங்கினவன்? (தாரி) - **பட்டதாரி**

5) அளந்து அளந்து கொட்டிடுவான் அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்) - **பணியாள்**

6) அள்ளி அள்ளிக் கொடுத்திடுவான்; அகம் மகிழத் தந்திடுவான் (ஆளி) - கொடையாளி "

**13) "நீளும் கைகளில் தோழமை தொடரும் நீளாத கைகளில் நெஞ்சம் படரும்" - தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

மோனை : முதல் எழுத்து ஒன்றுபோல் வருவது மோனை.
சான்று : நீளும் - நீளாத; தொடரும் - தோழமை.
எதுகை : முதல் எழுத்து அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வருவது எதுகை.
சான்று : நீளும் - நீளாத; தொடரும் - படரும்
இயைபு : இறுதி எழுத்து ஒன்றுபோல் வருவது இயைபு.
சான்று : தொடரும் - படரும்
முரண் : எதிர்ச்சொல் பயின்று வருவது முரண்.
சான்று : நீளும் x நீளாத

**14) திருத்தக் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.**

பிழைகள் உள்ள அச்சுப்படியைத் திருத்துவதற்குக் கையாளப்படும் திருத்தக் குறியீடுகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை :

1. பொதுவானவை
2. நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை
3. இடைவெளி தரவேண்டியவை
4. இணைக்க வேண்டியவை
5. எழுத்து வடிவம் என்பவையாகும்

**15) பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?**

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை 1. பகுதி, 2. விகுதி, 3. இடைநிலை, 4. சந்தி, 5. சாரியை, 6. விகாரம்

**16) காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

ஒரு வினைப் பகுபதத்தில், பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து, காலம் உணர்த்தும் உறுப்பு, காலம் காட்டும் இடைநிலை ஆகும்

இறந்தகால இடைநிலைகள் - த், ட், ற், இன்

நிகழ்கால இடைநிலைகள் - கிறு, கின்று, ஆநின்று

எதிர்கால இடைநிலைகள் - ப், வ்

**17) விகுதிகள் எவற்றை உணர்த்தும்?**

ஒரு வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் நின்று, திணை, பால், எண், இடம் ஆகியவற்றை விகுதிகள் உணர்த்தும்.

**18) உள்ளுறை உவமம், இறைச்சி விளக்குக.**

**உள்ளுறை உவமம்:**

உவமைக்குள் மற்றொரு பொருளைக் குறிப்பாக உணர்த்துவது உள்ளுறை உவமம் ஆகும்.

சான்று - "ஈயல் புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த " என்ற அகநானூற்றுப் பாடல்

**இறைச்சி :**

குறிப்புப்பொருளுக்குள் மேலும் ஒரு குறிப்புப்பொருள் அமைந்திருக்குமானால் அதற்கு இறைச்சி என்று பெயர்.

சான்று : "நசை பெரிது உடையர் நல்கலும் நல்குவர்" என்ற குறுந்தொகைப் பாடல்

**19) உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் - வேறுபாடு தருக.**

சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்து அடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம்

எடு - கப்பல், கட்டம்

சொற்களின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் அடுத்து அடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம்

எடு - தேர்தல், வாழ்க

**20) எண்ணும்மைத் தொடர்கள் இரண்டினை எழுதுக.**

அவளும் நானும், இனிப்பும் கசப்பும்

**21) உள்ளுறை உவமம் என்றால் என்ன ?**

உவமைக்குள் மற்றொரு பொருளைக் குறிப்பாக உணர்த்துவது உள்ளுறை உவமம் ஆகும்.

சான்று - "ஈயல் புற்றத்து ஈர்ம்புறத்து இறுத்த " என்ற அகநானூற்றுப் பாடல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

1) **அழைத்தான்** - அழை + த் + த் + ஆன்
அழை - பகுதி
த் - சந்தி
த் - இறந்த கால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

2) **மலிந்த** - மலி + த்(ந்) + த் + அ
மலி - பகுதி
த் - சந்தி ; த், ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

3) **விடுத்தல்** - விடு + த் + த் + அல்
விடு - பகுதி,
த் - சந்தி,
த் - இறந்தகால இடைநிலை,
அல் - தொழிற்பெயர் விகுதி

4) **மலிந்து** - மலி + த்(ந்) + த் + உ
மலி - பகுதி
த் - சந்தி ; த், ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

5) **அணிந்தான்**- அணி + த்(ந்) +த் + ஆன்
அணி - பகுதி
த் - சந்தி (த்,'ந்' என ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

6) **அலர்ந்து** - அலர் + த் (ந்) + த் + உ
அலர் - பகுதி
த் - சந்தி,(ந் ஆனது விகாரம்)
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

7) **ஆழ்க** - ஆழ் + க
ஆழ் - பகுதி,
க - வியங்கோள் வினைமுற்று விகுதி.

8) **உண்டான்** - உண் + ட் + ஆன்
உண் - பகுதி,
ட் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

9) **நெருங்கின** - நெருங்கு + இன் + அ
நெருங்கு - பகுதி,
இன் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

10) **ஈன்ற** - ஈன் + ற் + அ
ஈன் - பகுதி
ற் - இறந்தகால இடைநிலை
அ - பெயரெச்ச விகுதி

11) **முளைத்த** - முளை + த் + த் + அ
முளை -பகுதி,
த் - சந்தி,
த் - இறந்தகால இடைநிலை,
அ - பெயரெச்ச விகுதி

**வைத்தார்** = வை + த் + த் + ஆர்
வை - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**மெலிந்து** மெலி + த் (ந்) + த் உ
மெலி - பகுதி
த் - சந்தி, ந் ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி.

**அணிந்தேன்** = அணி + த்(ந்) +த் + ஏன்
அணி - பகுதி
த் - சந்தி (த்,'ந்' ஆனது விகாரம் )
த் - இறந்தகால இடைநிலை
ஏன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**மருண்டனென்** = மருள்(ண்) + ட் + அன்
மருள் - பகுதி, 'ள்' 'ண்' ஆனது விகாரம்
ட் - இறந்தகால இடைநிலை,
அன் - சாரியை
என் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**மறுத்து** = மறு + த் + த் + உ
மறு - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**நிற்கின்றாய்** = நில்(ற்) + கின்று + ஆய்
நில் - பகுதி (ல், ற் எனத் திரிந்தது விகாரம்)
கின்று - நிகழ்கால இடைநிலை
ஆய் - முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**துஞ்சல்** = துஞ்சு + அல்
துஞ்சு - பகுதி,
அல் - தொழிற்பெயர் விகுதி

**நின்றார்** = நில்(ன்) + ற் ஆர்
நில் - பகுதி ('ல்' 'ன் ஆனது விகாரம்)
ற் - இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**முனிவிலர்** = முனி + வ் + இல் +அர்
முனி -பகுதி,
வ் - உடம்படுமெய், சந்தி
இல் - எதிர்மறை இடைநிலை
அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**செய்வான்** = செய்+வ்+ஆன்
செய் - பகுதி,
வ் - எதிர்கால இடைநிலை,
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

**ஆழ்க** = ஆழ் + க
ஆழ் - பகுதி,
க - வியங்கோள் வினைமுற்று விகுதி.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

**உயிரீறு + உயிர்முதல் ( உ + உ )**

1) **புவியாட்சி** = புவி + ஆட்சி
இ ஈ ஐ வழி யவ்வும் → புவி + ய் + ஆட்சி
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே → புவியாட்சி

2) **திருவடி** = திரு + அடி
ஏனை உயிர்வழி வவ்வும் → திரு + வ் + அடி
உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே → திருவடி.

**குற்றியலுகரப் புணர்ச்சி**

3) **தண்டுடை** = தண்டு + உடை
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் → தண்ட் + உடை
உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே → தண்டுடை

4) **உலகனைத்தும்** = உலகு + அனைத்தும்
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் → உலக் + அனைத்தும்
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே → உலகனைத்தும்

5) **இயைவதாயினும்** = இயைவது + ஆயினும்
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் → இயைவத் + ஆயினும்
உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே → இயைவதாயினும்

6) **இழுக்கின்றி** = இழுக்கு + இன்றி
உயிர் வரின் உக்குறள் மெய் விட்டோடும் → இழுக்க் + இன்றி
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே = இழுக்கின்றி.

**உயிரீறு + மெய்ம்முதல் ( உ + மெ )**

7) **திருப்புகழ்** = திரு + புகழ்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் → திருப்புகழ்
8) **மணிக்குலம்** = மணி + குலம்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் → மணிக்குலம்

**மெய்யீறு + உயிர்முதல் ( மெ + உ )**

9) **புகழெனின்** = புகழ் + எனின்
உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே → புகழெனின்
10) **மண்ணுடை** = மண் + உடை
தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் → மண்ண் + உடை
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே → மண்ணுடை

**பண்புப்பெயர்ப் புணர்ச்சி**

| | |
|---|---|
| 11) **அருவினை** = அருமை + வினை<br>ஈறு போதல் → அரு வினை | 12) **கருங்கடல்** = கருமை + கடல்<br>ஈறு போதல் → கரு + கடல்<br>இனம்மிகல் → கருங்கடல் |
| 13) **செங்கயல்** = செம்மை + கயல்<br>ஈறு போதல் → செம் + கயல்<br>முன்னின்ற மெய் திரிதல் → செங்கயல் | 4) **அரும்பொருள்** = அருமை + பொருள்<br>ஈறு போதல் → அரு + பொருள்<br>இனமிகல் → அரும்பொருள். |


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## புணர்ச்சி விதிகள்

**புலனறிவு** = புலன் + அறிவு
உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - புலனறிவு

**பயமில்லை** = பயம் + இல்லை
உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - பயமில்லை

**நீரோடை** = நீர் + ஓடை
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே --> நீரோடை

**வில்லொடிந்தது** = வில்+ஒடிந்தது
தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும் -> வில்ல் + ஒடிந்தது
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே -> வில்லொடிந்தது

**அணிந்துரை** = அணிந்து + உரை
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் → அணிந்த் + உரை
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே -> அணிந்துரை.

**உயர்ந்தோங்கும்** = உயர்ந்து + ஓங்கும்
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் -> உயர்ந்த் + ஓங்கும்.
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே -> உயர்ந்தோங்கும்.

**அமுதென்று** = அமுது + என்று
உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் -> அமுத் + என்று
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே -> அமுதென்று

**உழுதுழுது** = உழுது + உழுது
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் -> உழுத்+உழுது
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே -> உழுதுழுது

**வழியில்லை** = வழி + இல்லை
இ ஈ ஐ வழி யவ்வும் -> வழி + ய் + இல்லை
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே -> வழியில்லை

**முறையறிந்து** = முறை + அறிந்து
இஈஐ வழி யவ்வும் -> முறை + ய் + அறிந்து
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே-> முறையறிந்து.

**மனையென** = மனை + என
இ ஈ ஐ வழி யவ்வும் -> மனை + ய் + என
உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே > மனையென.

**அருவினை** = அருமை + வினை
ஈறு போதல் -> அரு வினை

**சிறுகோல்** = சிறுமை + கோல்
ஈறு போதல் -> சிறுகோல்

**பேரழகு** = பெருமை + அழகு
ஈறு போதல் -> பெரு + அழகு
ஆதி நீடல் -> பேரு + அழகு
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் பேர் + அழகு (உகரம் கெட்டது)
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே - பேரழகு

**சிற்றூர்** = சிறுமை + ஊர்,
ஈறு போதல் சிறு + ஊர்
தன்னொற்றிரட்டல் -> சிற்று + ஊர்
உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் -> சிற்ற் + ஊர்
உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே -> சிற்றூர்

**பொதுச்சிறப்பு** = பொது + சிறப்பு
இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் - பொதுச்சிறப்பு.

**திரைப்படம்** = திரை + படம்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் - திரைப்படம்

**காலத்தச்சன்** = காலம் + தச்சன்
மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் > கால + தச்சன்
இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் -> காலத்தச்சன்

**புறந்தருதல்** = புறம் + தருதல்
மவ்வீறு ஒற்று வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் -> புறந்தருதல்.

**கற்பொடி** = கல் + பொடி
லள வேற்றுமையில் வலி வரின் றடவும் -> கற்பொடி


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | |
|---|---|
| **கற்பிளந்து** = கல் + பிளந்து<br>ல ள வேற்றுமையில் வலிவரின் றடவும் > கற்பிளந்து | |
| **பொற்சிலம்பு** = பொன் + சிலம்பு<br>ணன வல்லினம் வர டறவும் > பொற்சிலம்பு. | |
| **தொன்னகர்** - தொன்மை + நகர்<br>"ஈறுபோதல்" (தொன் + நகர்)<br>"னல முன் றனவும் ஆகும் தநக்கள்" (தொன்னகர்) | |
| **பொன்னகர்** - பொன் + நகர்<br>"னல முன் றனவும் ஆகும் தநக்கள்" (பொன்னகர்) | |
| **நெற்சேர** - நெல் + சேர<br>"லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும்" (நெற்சேர) | |
| **பொற்றுகளை** - பொன் + துகளை<br>"னலமுன் றன ஆகும் தநக்கள்" (பொன் + றுகளை)<br>"லள வேற்றுமையில் வலிவரின் றடவும் ஆகும்" (பொற்றுகளை) | |

## இலக்கணக் குறிப்பு

**இரண்டாம் வேற்றுமைத்தொகை** - கொன்றைசூடு, **உடை அணிந்தேன்**

**தொழிற்பெயர்** - உண்டல், துஞ்சல், **அறிதல்**, போற்றல், நினைத்தல், கேட்டல், பயிறல், ஒழிதல், தங்குதல், காட்டல், கோடல், துய்த்தல் உரிச்சொல் தொடர் - மாநகர், உறுபகை, கடி நகர், சாலத் தகும், நனிஇகக்கும்

**பண்புத்தொகை** - செங்கயல், வெண்பால், தீம்பால், வெண்சங்கு, பெரும்புகழ், தெண்டிரை, நல்லாடை, நன்னாடு, அருஞ்சமம், பேரன்பு, நெடுங்குன்று, இளமுகம், நல்லூண் சிறுபுல். பேரழகு, முந்நீர், நன்மண்

**வினைத்தொகை** - விரிகதிர், ஒழுகுநீர், எறிவாள், சுடுகாடு, கொல்புலி, புகழ்பண்பு, குரைகடல், அலைகடல் செய்தொழில், அலைகடல் வீழருவி

**பெயரெச்சம்** - மலிந்த, மண்டிய, பூத்த, பொலிந்த, மாண்ட தவளை, பின்னிய, முளைத்த

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்** - முயலா, ஆசிலா, ஓவா, பிழையா, ஓடியா

**வினையெச்சம்** - உருட்டி, தாவி,

**வினையாலணையும் பெயர்** - குறிப்புணர்வார், கேட்போர், பிரிந்தோர்,

**சொல்லிசை அளபெடை** : வளைஇ, அசைஇ,ஒரீஇய

**அடுக்குத்தொடர்** - நன்றுநன்று, சுடச்சுட, பார்த்துப் பார்த்து, நில்நில், உழுதுழுது

**இரட்டைக்கிளவி** - நெறுநெறு

**எண்ணும்மை** - மஞ்ஞையும் கொண்டலும், அறிவும் ஒழுக்கமும், தானமும் ஒழுக்கமும், தவமும் ஈகையும், புழுக்களும் பூச்சியும்

**இருபெயரொட்டுப் பண்புத்தொகை** - தமிழ்க்கவிஞர்

**உவமைத்தொகை** - மலையலை, குகைமுகம்

**உருவகம்** - காலத்தச்சன்

**உம்மைத்தொகை** - புல்புழு, இராப்பகல்

**முற்றும்மை** - ஐந்தும்

**வியங்கோள் வினைமுற்று** - கெடுக, ஓதுக, பேசிடுக, ஆழ்க, வாழிய

**தன்மை ஒருமை வினைமுற்று** - மருண்டனென், கற்றேன்

**தன்மைப் பன்மை வினைமுற்று** - ஆடுகம்


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**முன்னிலை ஒருமை வினைமுற்று** - உரைத்தாய்

**ஏவல் ஒருமை வினைமுற்று** - ஏகுதி

**ஏவல் பன்மை வினைமுற்று** - ஏகுமின்

**இலக்கணப் போலி** - வாய்க்கால்

**ஈற்றுப் போலி** - இடன், பந்தர், அறன், திறன்

**இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை** - பூக்குலை, பொன்னகர்

**மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை** - பொற்கலம், பொற்சிலம்பு

**ஆறாம் வேற்றுமைத்தொகை** – அகிற்புகை

**மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**

| உயிரினம் | ஒலி(மரபு) |
|---|---|
| ஆடு | கதறும் |
| எருது | எக்காளமிடும் |
| குதிரை | கனைக்கும் |
| குரங்கு | அலப்பும் |
| சிங்கம் | முழங்கும், கர்ச்சிக்கும் |
| நரி | ஊளையிடும் |
| புலி | உறுமும் |
| பூனை | சீறும்/கீலும் |
| யானை | பிளிறும் |
| எலி | கீச்சிடும் |
| ஆந்தை | அலறும் |
| காகம் | கரையும் |
| கிளி | பேசும் |
| குயில் | கூவும் |
| கூகை | குழறும் |
| கோழி | கொக்கரிக்கும் |
| சேவல் | கூவும் |
| புறா | குனுகும் |
| மயில் | அகவும் |
| வண்டு | முரலும் / இரையும் |
| பசு | அழைக்கும்/முக்காரமிடும் |

| பொருள் | வினை(மரபு) |
|---|---|
| அம்பு | எய்தார் |
| ஆடை | நெய்தார் |
| உமி | கருக்கினார் |
| பூ | பறித்தார் |
| மரம் | வெட்டினார் |
| மாத்திரை. | விழுங்கினார் |
| சோறு | உண்டார் |
| தண்ணீர். | குடித்தார் |
| பால் | பருகினார் |
| கூடை | முடைந்தார் |
| சுவர் | எழுப்பினார் |
| முறுக்குத். | தின்றார் |
| **விலங்கு** | **இருப்பிடம்** |
| கறையான் | புற்று |
| ஆடு | பட்டி |
| மாடு | தொழுவம் |
| குதிரை | கொட்டில் |
| கோழி | பண்ணை |
| குருவி | கூடு |
| சிலந்தி | வலை |
| எலி | வளை |
| நண்டு | வளை |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| தாவரம் | உறுப்பு |
|---|---|
| வேப்பம் | தழை |
| ஆவாரம் | குழை |
| நெல் | தாள் |
| வாழை | தண்டு |
| கீரை | தண்டு |
| தாழை | மடல் |
| முருங்கை | கீரை |
| தென்னை | ஓலை |
| கம்பம் | தட்டு(திட்டை) |
| சோளம் | தட்டு(திட்டை) |

| விலங்கு | இளமைப்பெயர் |
|---|---|
| கோழி | குஞ்சு |
| கிளி | குஞ்சு |
| அணில் | பிள்ளை |
| கீரி | பிள்ளை |
| பசு | கன்று |
| நாய் | குட்டி |
| புலி | பறழ் |
| சிங்கம் | குருளை |
| யானை | கன்று |
| குதிரை | கன்று |
| எருமை | கன்று |

1) **களி மயில் கூவும் ; புள்ளிக் கருங்குயில் பேசும்**
களி மயில் அகவும் புள்ளிக் கருங்குயில் கூவும்.
2) **பழம் உண்டு பால் குடித்தான்**
பழம் தின்று பால் அருந்தினான்.
3) **காகம் கத்த மயில் கூவியது**
காகம் கரைய மயில் அகவியது.
4) **குயில் கத்த நாய் ஊளையிட்டது**
குயில் கூவ நாய் குரைத்தது.
5) **சோறு சாப்பிட்டு, நீர் பருகினான்**
சோறு உண்டு நீர் அருந்தினான்.

### பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

1) **ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமா பதிய வைக்கனும்.**
ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்கவேண்டும்.
2) **காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கிடைக்கும்.**
அதிகாலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.
3) **முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராம போவாது.**
முயற்சி செய்தால் அதற்கேற்ற பயன் வராமல் போகாது.
4) **காலத்துக்கேத்த மாரி புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்**
காலத்துக்கேற்ற மாதிரி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.
5) **தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனா பதட்டமாயிரும்.**
தேர்வெழுத விரைவாகச் செல்லுங்கள், நேரம் கழித்துச் சென்றால் பதற்றமாகிவிடும்.

### தமிழாக்கம் தருக

0) **The happiness of your life depends upon the quality of your thoughts**
உங்கள் வாழ்வின் மகிழ்ச்சி, உங்கள் எண்ணங்களின் தரத்தைப் பொருத்து அமையும்.
1) **The Pen is mightier than the sword**
எழுதுகோல் வாளைவிட வலிமையானது.
2) **A Picture is worth a thousand words.**
ஒரு படம் ஆயிரம் சொற்களுக்கு நிகரானது.
3) **A nation's culture resides in the hearts and in the soul of its people.**
ஒரு நாட்டின் பண்பாடு, அந்த நாட்டு மக்களின் இதயங்களிலும் ஆன்மாவிலும்தான் இருக்கிறது.
4) **An eye for an eye only ends up making the whole world blind.**
கண்ணுக்குக் கண் எனப் பழிக்குப்பழி வாங்குவது உலகம் முழுவதையும் குருடாக்கிவிடும்.
5) **You must be the change you wish to see in the world.**
இந்த உலகத்தில் மாற்றத்தைக் காண விரும்பினால் நீ முதலில் மாற வேண்டும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**6) The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.**

வலிமை இல்லாதவன் மன்னிக்க மாட்டான். மன்னித்தல் என்பது வலிமையானவனின் உயர்ந்த பண்பு.

**7) Nobody can hurt me without my permission.**

என் அனுமதி இல்லாமல் என்னை யாரும் காயப்படுத்த முடியாது.

**8) Winners don't do different things, they do things differently.**

வெற்றியாளர்கள் வேறுபட்ட செயல்களைச் செய்வதில்லை; செய்யும் செயல்களை வேறுபாடாகச் செய்கிறார்கள்.

**9) In nature, light creates the colour. In the picture, colour creates the light.**

இயற்கையில் ஒளி வண்ணங்களை உருவாக்குகிறது. ஓவியத்தில் வண்ணங்கள் ஒளியை உருவாக்குகின்றன.

**10) Roads were made for journeys not destinations.**

சாலைகள் பயணங்களுக்காக அமைக்கப்பட்டவை; சேருமிடங்களுக்காக அல்ல.

**11) Education is the most powerful weapon, which you can use to change the world.**

கல்வி என்பது அதிக ஆற்றல் வாய்ந்த கருவி; அதனைக் கொண்டு உலகையே மாற்றலாம்.

**12) Looking at beauty in the world is the first step of purifying the mind.**

உலகத்தில் இருக்கும் அழகைக் காண்பதே மனத்தைத் தூய்மை செய்வதற்கான முதல் படியாகும்.

**13) Culture does not make people; People make culture.**

பண்பாடு மக்களை உருவாக்குவதில்லை; மக்களே பண்பாட்டை உருவாக்குகிறார்கள்.

**14) People without the knowledge of their past history and culture is like a tree without roots.**

கடந்தகால வரலாற்றையும் பண்பாட்டையும் அறியாத மக்கள், வேர்கள் இல்லாத மரத்தைப் போன்றவர்கள்.

**15) Simplicity is nature's first step, and the last of art**

எளிமை என்பது இயற்கையின் முதல் படி: அதுவே கலையின் இறுதிப்படி.

**16) Look deep into nature and then you will understand everything better.**

இயற்கையை ஆழமாகப் பார்த்தால் அனைத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

**17) Work while you work and play while you play.**

வேலை நேரத்தில் வேலை செய், விளையாடும் நேரத்தில் விளையாடு.

**18) Just living is not enough. One must have sunshine, freedom and a little flower.**

ஏதோ வாழ்ந்தோம் என்பது மட்டும் போதாது. ஒருவன் சூரிய ஒளி மிகுந்த , விடுதலை உடைய சிறு மலர் போல் வாழ வேண்டும்.

**19) Knowledge rules the world.**

அறிவே உலகத்தை ஆள்கிறது.

**20) You must not lose faith in humanity. Humanity is an ocean; if a few drops of the ocean are dirty, the ocean does not become dirty.**

மனிதநேயத்திடம் நீங்கள் நம்பிக்கை இழக்கக்கூடாது. மனிதநேயம் என்பது ஒரு கடல் போன்றது. அதில் ஒரு சில துளிகள் அழுக்காக இருந்தால், கடலே அழுக்கடைந்து போகாது.

## பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக:

| | |
|---|---|
| 1) Emotion - உணர்ச்சி | Religion - மதம் |
| 2) Escalator - நகரும் மின்படிகட்டு | Philosophy - தத்துவம் |
| 3) Prospectus - விளக்கச்சுவடி | Medicine - மருத்துவம் |
| 4) Mass Drill - கூட்டு உடற்பயிற்சி | Science - அறிவியல் |
| | Idols - சிலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாடகை | - | குடிக்கூலி | விசா | - | நுழைவு இசைவு |
| மாதம் | - | திங்கள் | பாஸ்போர்ட் | - | கடவுச்சீட்டு |
| போலீஸ் | - | காவல் | கம்பெனி | - | நிறுவனம் |
| நிச்சயம் | - | உறுதி | பத்திரிகை | - | செய்தித்தாள், இதழ் |
| உத்திரவாதம் | - | பிணை | கோரிக்கை | - | வேண்டுகோள் |
| சந்தோஷம் | - | மகிழ்ச்சி | யுகம் | - | ஊழி |
| சம்பளம் | - | உழைப்பூதியம் | ராச்சியம் | - | அரசு |
| ஞாபகம் | - | நினைவு | சரித்திரம் | - | வரலாறு |
| வருடம் | - | ஆண்டு | முக்கியத்துவம் | - | முதன்மை |
| தேசம் | - | நாடு | சொந்தம் | - | உறவினர் |
| வித்தியாசம் | - | வேறுபாடு | சமீபம் | - | அண்மை |
| உற்சாகம் | - | களிப்பு, ஊக்கம் | தருணம் | - | நேரம் |

www.Padasalai.Net

**தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

**1) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்**

அ) மயில் ஓர் அழகான பறவை.
ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

**2) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி**

அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.
ஆ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

**3) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனத்தை.**

அ) மாலை நிலவு மனத்தை மகிழ்விக்கும்.
ஆ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.

**4) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.**

அ) பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது.
ஆ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

**5) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?**

அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?
ஆ) பக்கத்தில் ஏன் இருக்கவில்லை?

**6) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்த நாடு வந்தனர்**

அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.
ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

**ரு) வேர்ச்சொற்களைத் தொடர்களாக மாற்றுக.**
**அ) வா - வேர்ச்சொல்.**
அவன் வந்தான். (வினைமுற்று)
அங்கு வந்த வண்டி நன்றாக இருந்தது. (பெயரெச்சம்)
அவன் வந்து நின்றான். (வினையெச்சம்)
அங்கு வந்தவர், என் நண்பர். ( வினையாலணையும் பெயர்)

**ஆ) பேசு - வேர்ச்சொல்**
அவள் பேசினாள். (வினைமுற்று)
அங்கு மேடையில் பேசிய பேச்சு நன்றாக இருந்தது. (பெயரெச்சம்)
அவன் பேசி முடித்தான், (விளையெச்சம்)
அங்கு மேடையில் பேசியவர், என் நண்பர். (வினையாலணையும் பெயர்)

**இ) தா - வேர்ச்சொல்**
அண்ணன் பரிசு தந்தான். (வினைமுற்று)
அண்ணன் தந்த பரிசு நன்றாக இருந்தது. (பெயரெச்சம்)
அண்ணன் என்னிடம் பரிசு தந்து சென்றான். (வினையெச்சம்)
அண்ணனிடம் பணம் தந்தவர் யார்? (வினையாலணையும் பெயர்)

**ஈ) ஓடு - வேர்ச்சொல்**
அவன் ஓடினான். (வினைமுற்று)
அங்கு ஓடிய பையன், நன்றாக ஓடினான். (பெயரெச்சம்)
அவன் ஓடிச் சென்றான். (வினையெச்சம்)
அங்கு ஓடியவர், என் நண்பர் (வினையாலணையும் பெயர்)

**உ) பாடு - வேர்ச்சொல்**
அவன் பாடினான். (வினைமுற்று)
அங்கு மேடையில் பாடிய பாட்டு நன்றாக இருந்தது. (பெயரெச்சம்)
அவன் பாடி முடித்தான் (வினையெச்சம்)
அங்கு மேடையில் பாடியவர், என் நண்பர். (வினையாலணையும் பெயர்)

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1) **உலை, உளை, உழை**
வறுமையால் வரும் மன உளைச்சல் தீரவும், வீட்டில் உலை கொதிக்கவும் உழைத்திடுதல் வேண்டும்.

2) **வலி, வளி, வழி**
சூறாவளி வீசி, வழி தெரியாமல் ஓடி விழுந்ததால், உடல்வலி ஏற்பட்டது.

3) **கலை, களை, கழை**
கலை வளர்த்து வளர்த்துக் களைத்துப் போனவர்கள், கழைக்கூத்தாடிகள்.

4) **கனை, கணை**
குதிரை கனைத்ததால், வீரனின் கணை குறிதவறியது.

5) **குரை, குறை**
என் வீட்டு நாய் எப்போதும் குரைத்துக்கொண்டு இருப்பதால், பக்கத்து வீட்டுக்காரர்கள் குறை சொல்கிறார்கள்.

6) **பொரி, பொறி**
பொறியாளர் பொரி தின்றார்.

## புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க.

| | |
|---|---|
| 1. ஐந்தெழுத்துக்காரன்<br>முதலிரண்டோ<br>பாட்டெழுதுபவரின் பட்டம்<br>இரண்டும் மூன்றுமோ<br>பசும்பால் என்பதன் பின் இறுதி<br>கடைசி இரண்டெழுத்தோ<br>மானினத்தில் ஒரு வகையாம்<br>இரண்டும் ஐந்துமோ<br>பொருளை விற்கத் தேவையாம்<br>அது என்ன ? | 2) இறுதி இரண்டெழுத்தோ<br>பழத்தின் முந்தைய பச்சை நிலை<br>தமிழ்க்கடவுளின் முற்பாதியை<br>முதலிரு எழுத்தில் வைத்திருக்கும்<br>நடுவிலோ ஓரெழுத்து ஒருமொழி<br>அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம்<br>சேர்த்தால் காயாவான்<br>பிரித்தால் நிலைமொழியில் மரமாவான்<br>ஏழெழுத்துக்காரன் அவன் யார்? |
| **விடை: 1. ஐந்தெழுத்துக்காரன்-கவின்கலை** | **2. ஏழெழுத்துக்காரன்-முருங்கைக்காய்** |

## வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

**அ) புறநானூறு எட்டுதொகை நூல்களுள் ஒன்று புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களை கொண்டது.**
புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.

**ஆ) எண்வகை சித்திகளை கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள்.**
எண்வகைச் சித்திகளைக் கைவரப்பெற்றவர்கள் சித்தர்கள்.

**இ) தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளி பாய்ந்தது.**
தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்தது

**ஈ) அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.**
அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவேப் பெண்களும் அரசுப் பணியைப் பெறவேண்டும்.

1) **குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு**
குமரனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

2) **அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.**
அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெறவேண்டும்.

3) **கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.**
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்.

4) **தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.**
தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்துக் கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

5) **சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.**
சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.

| | | | |
|---|---|---|---|
| **அழகியல்** | - Aesthetics | **புத்தக மதிப்புரை** | - Book Review |
| **இதழாளர்** | - Journalist | **புலம் பெயர்தல்** | - Migration |
| **கலை விமர்சகர்** | - Art Critic | **மெய்யியலாளர்** | - Philosopher |
| இயற்கை வேளாண்மை | - Organic Farming | ஒட்டுவிதை | - Shell Seeds |
| மதிப்புக்கூட்டுப் பொருள் | - Value Added Product | தூக்கணாங்குருவி | - Weaver Bird |
| வேதி உரங்கள் | - Chemical Fertilizers | தொழு உரம் | - Farmyard Manure |
| வேர் முடிச்சுகள் | - Root Nodes | அறுவடை | - Harvesting |

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | |
|---|---|
| இனக்குழு - Ethnic Group<br>முன்னொட்டு - Prefix<br>புவிச்சூழல் - Earth Environment | பின்னொட்டு - Suffix<br>வேர்ச்சொல் அகராதி - Etymological Dictionary<br>பண்பாட்டுக்கூறுகள் - Cultural Elements |
| ஆவணம் - Document<br>உப்பங்கழி - Backwater<br>ஒப்பந்தம் - Agreement | படையெடுப்பு - Invasion<br>பண்பாடு - Culture<br>மாலுமி - Sailor |
| Fine Arts - நுண்கலை<br>Documentary - ஆவணப்படம்<br>Inscription / Epigraph - கல்வெட்டு | Grain Warehouse - தானியக் கிடங்கு<br>Disaster - பேரழிவு<br>Myth - தொன்மம் |
| Strategies - உத்திகள்<br>Equality - சமத்துவம்<br>Trade Union - தொழிற்சங்கம் | Debate - பட்டிமன்றம்<br>Multiple Personality - பன்முக ஆளுமை<br>Pseudonym - புனைபெயர் |
| Earthworm - நாங்கூழ்ப் புழு<br>Awareness - விழிப்புணர்வு<br>Globalisation - உலகமயமாக்கல்<br>Passport - கடவுச்சீட்டு<br>Doctor of Philosophy (Ph.D) - முனைவர் பட்டம் | Materialism - பொருள்முதல் வாதம்<br>Smartphone - திறன்பேசி<br>Touch screen - தொடுதிரை<br>Gazette - அரசிதழ்<br>Prospectus - விளக்கச்சுவடி |
| *Personality* ஆளுமை<br>*Emotion* - உணர்ச்சி,<br>*Plastic* - நெகிழி,<br>*Escalator* - நகரும் மின்படி<br>*Apartment* - அடுக்ககம்<br>*Cellphone* - பேசி, செல்லிடப்பேசி, அலைபேசி<br>*Website* - இணையம்<br>*Blog* - வலைப்பூ<br>*Clinic* - மருத்துவமனை<br>*Blood Group* - குருதிப்பிரிவு<br>*Pharmacist* - மருந்தாளுநர்<br>*X-Ray* - ஊடுகதிர்<br>*Typhoid* - குடற்காய்ச்சல்<br>*Ointment* - களிம்பு<br>*Note Book* - எழுதுசுவடி<br>*Answer Book* - விடைச்சுவடி<br>*Rough Note Book*- பொதுக் குறிப்புச் சுவடி<br>*Prospectus* - விளக்கச்சுவடி<br>*E-mail* - மின்னஞ்சல்<br>*Smart Phone* - திறன்பேசி<br>*Windows 10* - பலகணி 10<br>*8th Generation* - 8ஆம் தலைமுறை<br>*Meter* - மீட்டர்<br>*Ohm* - ஓம்<br>*library* - நூலகம்<br>*librarian* - நூலகர்<br>*library science* - நூலக இயல் | *Straw* - உறிஞ்சுகுழல்<br>*Mass Drill* - கூட்டு உடற்பயிற்சி<br>*Horticulture* - தோட்டக்கலை<br>*Average* - சராசரி<br>*Touch screen* - தொடுதிரை<br>*Bug* - பிழை<br>*Gazette* - அரசிதழ்<br>*Despatch* - அனுப்புகை<br>*Subsidy* - நல்கை<br>*Ceiling* - உச்சவரம்பு<br>*Circular* - சுற்றறிக்கை<br>*SubJunior* - மிக இளையோர்<br>*Super Senior* - மீமூத்தோர்<br>*Carrom* - நாலாங்குழி ஆட்டம்<br>*Sales Tax* - விற்பனைவரி<br>*Customer* - வாடிக்கையாளர்<br>*Consumer* - நுகர்வோர்<br>*Account* - பற்று வரவுக் கணக்கு<br>*Referee* - நடுவர்<br>*Pilot* - வலவன்<br>*Measles* - அம்மை<br>*Decimal* - தசம முறை<br>*Molecule* - மூலக்கூறு<br>*Photosynthesis* ஒளிச்சேர்க்கை<br>*Antibiotics* - நச்சுயிர்க் கொல்லிகள்<br>*Member* - உறுப்பினர் |

**புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

(கம்பு, மை,வளை, மதி, இதழ், ஆழி)

1. எலியும் நுழையும் : எழிலரசி கையும் நுழையும். விடை : **வளை**
2. அடிக்கவும் செய்யலாம் : கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம். விடை : **கம்பு**
3. கண்ணிலும் எழுதலாம்: வெண்தாளிலும் எழுதலாம். விடை : **மை**
4. அறிவின் பெயரும் அதுதான்: அம்புலியின் பெயரும் அதுவேதான் விடை : **மதி**
5. பூவின் உறுப்பும் நானே: புன்னகையின் பிறப்பிடமும் நானே விடை : **இதழ்**
6. வண்டியையும் இயக்கும்: பெரும் கப்பலையும் தாங்கும். விடை : **ஆழி**

**சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

**கால்நடை**

**கால்நடைகளை** ஓட்டிச்சென்றார்கள்

கோவிலுக்குக் **கால்நடையாக**ச் சென்றேன்.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**பிண்ணாக்கு**

மாட்டிற்கு உணவு, **பிண்ணாக்கு** ஆகும்.
பாம்பு, **பிள் நாக்கு** உடையது.

**எட்டுவரை**

அவனுக்கு **எட்டுவரை** எண்ணத் தெரியும்.
**எள், துவரை** முதலான தானியங்கள் உடலுக்கு நல்லது.

**அறிவில்லாதவன்**

அவன் **அறிவில்லாதவன்**.
அவன் **அறிவில் ஆதவன்** போன்றவன்.

**தங்கை**

என் **தங்கை** நன்றாகப் படிப்பாள்.
**தம் கையே** தமக்கு உதவி.

**வைகை**

மதுரையில் **வைகையாறு** பாய்கிறது.
புத்தகத்தின் மீது **வை கையை** என்று ஆசிரியர் கூறினார்.

**நஞ்சிருக்கும்**

பழைய சட்டை **நஞ்சிருக்கும்** (நைந்திருக்கும்).
பாம்பின் பல்லில் **நஞ்சு இருக்கும்**.

**விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

1) தனிமொழி - அறிவு; **தொடர்மொழி** - வண்ணமயில்; பொதுமொழி - **பலகை** (பலகை / பல கை)
2) கார்காலம் - **ஆவணி, புரட்டாசி**; குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை; **முன்பனிக் காலம்** - மார்கழி, தை.
3) எழுத்து, சொல், **பொருள்**, யாப்பு, **அணி**.
4) எழுத்து, **அசை**, சீர், தளை, **அடி**, தொடை.
5) சேரன் - வில், சோழன் - **புலி**, **பாண்டியன்** - மீன்.

**மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

***எதிர்நீச்சல்** : பிரச்சனைகள் வந்தால் **எதிர்நீச்சல்** போட்டு வெற்றி பெற வேண்டும்.

***சொந்தக்காலில் நிற்றல்**: வேலைக்குச் சென்றால், **சொந்தக்காலில் நிற்கலாம்.**

***தாளம் போடுதல்**: மேலதிகாரிகளுக்கு உதவியாளர்கள் **தாளம் போடுகின்றனர்.**

***மதில்மேல் பூனை**: நாளை அரசு விடுமுறை என்பது **மதில் மேல் பூனை** நிலையில் உள்ளது .

***நிறைகுடம்**: அவன் ஒரு **நிறைகுடம்** போல் பணிவாக நடந்துகொண்டான்.

***கை தூக்கி விடுதல்** : புதியவர்களைக் **கை தூக்கி விடுதல்** அரசியல் தலைவருக்கு அழகாகும்.

***கண்ணாயிருத்தல்**: காரியத்தின் மேல் **கண்ணாயிருத்தல்** என்பது பின்பற்ற வேண்டிய பண்பாகும்.

***அவசரக் குடுக்கை**: கோபி எந்தக் காரியத்தையும் யோசிக்காமல் செய்து, வம்பில் மாட்டிக்கொள்ளும் ஓர் **அவசரக்குடுக்கை**.

***முதலைக் கண்ணீர்**: பெற்றோரை முதியோர் விடுதியில் விட்டுவிட்டு, இறந்தபின் அவர்களை நினைத்து, **முதலைக்கண்ணீர்** வடிக்கின்றனர்.

***கானல் நீர்**: தமிழகத்தில் வேளாண்மை, **கானல்நீராகி** விடுமோ?.

**அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**

1) வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி) - **உளவாளி**
2) அறிவைத் தேடிப் போகுமிடம் உலகம் அறிய உதவுமிடம் (அகம்) - **நூலகம்**
3) வந்தால் மகிழ்ச்சி இது உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - **வருமானம்**
4) வேட(ஷ)ம் போட்டவன் வேடதாரி பட்டம் வாங்கினவன்? (தாரி) - **பட்டதாரி**
5) அளந்து அளந்து கொட்டிடுவான் அகம் மகிழத் தந்திடுவான் (ஆள்) - **பணியாள்**
6) அள்ளி அள்ளிக் கொடுத்திடுவான்; அகம் மகிழத் தந்திடுவான் (ஆளி) - **கொடையாளி**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

### 1. பொதுவானவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
| --- | --- |
| Dt | அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக. |
| ^ | சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க. |
| [ | புதிய பத்தி (New Paragraph) தொடங்குக. |

### 2. நிறுத்தக் குறியீடுகள்

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
| --- | --- |
| ,/ | கால் புள்ளியைச் சேர்க்கவும். |
| ;/ | அரைப் புள்ளியைச் சேர்க்கவும் |
| ./ | முற்றுப்புள்ளி இடவும். |
| ?/ | வினாக்குறி அடையாளம் இடவும். |
| !/ | வியப்புக் குறியைச் சேர்த்துக் கொள்ளவும். |
| :/ | முக்காற்புள்ளி சேர்க்கவும். |

### 3. இடைவெளி தரவேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
| --- | --- |
| ⁀‿ | சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும். இடைவெளி விட வேண்டாம். |
| # | பத்திகளுக்கிடையில் வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக. |

### 4. இணைக்க வேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
| --- | --- |
| ⊐ | இடப்பக்கம் தள்ளவும் |
| ⊏ | வலப் பக்கம் தள்ளவும் |
| ⁀ | பத்திகளை இணைக்கவும் |
| ’/ | ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக |
| ”/ | இரட்டை மேற்கோள் குறியீடு இடுக |

### 5. எழுத்து வடிவம்

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
| --- | --- |
| Unbold | வழக்கமான எழுத்தில் மாற்றுக |
| Bold | தடித்த எழுத்தில் மாற்றுக |
| Trs | சொற்கள், எழுத்துகளை இடம் மாற்றுக |
| l.c. | எழுத்துருவைச் சிறியதாக ஆக்குக |

## நிறுத்தக் குறியிடுக.

1) **அறம் பொருள் இன்பம் வீடு என வாழ்க்கைப் பேறு நான்கு**
அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்க்கைப் பேறு நான்கு.

2) **பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும் கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார் - நிறுத்தக்குறியிடுக.**
'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும் 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர் தமது 16 -ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

## தொடர் மாற்றம் செய்க.

1) **மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றனர். சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர். (கலவைத் தொடராக மாற்றுக)**
மூன்று நாள்கள் கல்லூரிக்கு விடுமுறை என்பதால் மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்று, சிற்பங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

2) **தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும். (வினாத்தொடராக்குக)**
தஞ்சைக் கோவில் எந்த வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்?

3) **என்னே ! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை. [செய்தித் தொடராக்குக)**
மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக் கலை மிகவும் அழகானது.

4) **நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன். (பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக)**
நான் வாரத்தின் இறுதிநாள்களன்றிப் பிற நாள்களில் நூலகத்திற்குச் செல்லமாட்டேன்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

5) **பொறுமையைப் பூணுங்கள்; பொறுமையின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள் (ஒரே தொடராக மாற்றுக)**
பொறுமையைப் பூண்டு, அதன் ஆற்றலை உணர்ந்து, உலகை நோக்குங்கள்.

6) **தமிழ்த்தென்றல் என்று திரு.வி.க. அழைக்கப்படுகிறார். (செய்வினைத் தொடராக மாற்றுக)**
திரு.வி.க. வைத் 'தமிழ்த்தென்றல்' என்று அழைப்பர்.

**விடைக்கேற்ற வினா அமைக்க**

**அ. தமிழ் இதழியல் துறையில் முதல்முதலாகக் கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி.**
**தமிழ் இதழியல் துறையில் முதல்முதலாகக் கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் யார் ?**

**ஆ. நீலகேசி என்பது ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்று.**
நிலகேசி எதில் ஒன்று ?

**இ. திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் பமொழிபெயர்த்தவர் ஜி யூ போப்**
திருக்குறளை எதற்காக ஜி யூ போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் ?

**ஈ. சி.சு.செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்கேற்பு செய்திருக்கிறார்.**
சி சு செல்லப்பா எந்த எந்தத் தளங்களில் எல்லாம் பங்களிப்பு செய்திருக்கிறார்.

1. **மேடையில் வாழ்ந்த மனிதன், வாழ்ந்த இடத்தில் தானே மறைந்திருக்கவும் வேண்டுமென எண்ணுகிறது பேதை மனசு.**
   பேதை மனசு எவ்வாறு எண்ணுகிறது ?
2. **"மூச்சு நின்றுவிட்டது" என்று நான் சொன்னபோது, "பேச்சு நின்றபோதா" எனத் திருப்பிக் கேட்கிறார்கள்.**
   "பேச்சு நின்றபோதா" என எப்போது திருப்பிக் கேட்கிறார்கள் .
3. **பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.**
   அவர் பெற்ற வரம் எ ன்ரு எதனைச் சொல்ல வேண்டும்.
4. **பேச்சுக்கலை தான் அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது.**
   அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது எது ?
5. **தனக்குத் தெரியாத விஷயங்கள் பிறருக்குத் தெரிந்திருக்கும் என்ற எளிய உண்மை எப்போதும் அவர் நினைவில் நிற்கும்.**
   எவ்வுண்மை அவர் நினைவில் எப்போதும் நிற்கும் ?
6. **என் வாழ்வு, என் கைகளில் என்று நம்பினார், அவர்.**
   அவர் என்ன என்ரு நம்பினார் ?
7. **நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்றுவிட்டது.**
   நீரில் விழுந்த கிளை எங்குச் சென்ருவிட்டது ?

**இலக்கண மொழிப்பயிற்சி**
**39 திருக்குறள் அணி**

| அணி | எடுத்துக்காட்டு |
|---|---|
| 1) வேற்றுமை அணி | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினாற் சுட்ட வடு. |
| 2) சொற்பொருள் பின்வருநிலையணி | வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்<br>துணைவலியும் தூக்கிச் செயல். |
| 3) உருவக அணி | இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்<br>பார்தாக்கப் பக்கு விடும் |
| 4) பிறிதுமொழிதல் அணி | இளைதாக முள்மரம் கொல்க களையுநர்<br>கைகொல்லும் காழ்த்த இடத்து |


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

இந்த நான்குக் கேள்விகளையும் நன்குப் படித்து வைத்துக்கொள்ளவும் 3 x 4 = 12

1. **தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணிச்சுட்டல்:**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி, **வேற்றுமை அணி** ஆகும்.

**அணி இலக்கணம்:**

இரண்டு பொருள்களுக்கிடையே ஒற்றுமையைக் கூறி, அதன் பின்னர் ஒன்றை மட்டும் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

(எ.கா): **தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

**விளக்கம்:**

* தீயினால் சுட்டது வெளியே தெரியும் உள்ளே ஆறிவிடும். ஆனால்,
* நாவினால் சுட்டது வெளியே தெரியாது உள்ளே ஆறாமல் வடுவாக இருக்கும்.
* எனவே தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுகிறது.

**பொருத்தம்:**

ஒற்றுமை : தீயும் சுடும், நாவும் சுடும்
வேற்றுமை : தீக்காயம் ஆறிவிடும், தீச்சொல்லால் ஏற்பட்ட மனக்காயம் ஆறாது
எனவே இது வேற்றுமை அணி ஆகும்.

**வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக.**

**அணி இலக்கணம்:**

இரண்டு பொருள்களுக்கிடையே ஒற்றுமையைக் கூறி, அதன் பின்னர் ஒன்றை மட்டும் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

(எ.கா): **தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

**விளக்கம்:**

* தீயினால் சுட்டது வெளியே தெரியும் உள்ளே ஆறிவிடும். ஆனால்,
* நாவினால் சுட்டது வெளியே தெரியாது உள்ளே ஆறாமல் வடுவாக இருக்கும்.
* எனவே தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுகிறது.

**பொருத்தம்:**

ஒற்றுமை : தீயும் சுடும், நாவும் சுடும்
வேற்றுமை : தீக்காயம் ஆறிவிடும், தீச்சொல்லால் ஏற்பட்ட மனக்காயம் ஆறாது
எனவே இது வேற்றுமை அணி ஆகும்.

2) **வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல். - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணிச்சுட்டல்:**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி, **சொற்பொருள் பின்வருநிலையணி** ஆகும்.

**அணி இலக்கணம்:**

இரண்டு பொருள்களுக்கிடையே ஒற்றுமையைக் கூறி, அதன் பின்னர் ஒன்றை மட்டும் வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணியாகும்.

(எ.கா): **தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

**விளக்கம்:**

* தீயினால் சுட்டது வெளியே தெரியும் உள்ளே ஆறிவிடும். ஆனால்,
* நாவினால் சுட்டது வெளியே தெரியாது உள்ளே ஆறாமல் வடுவாக இருக்கும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

* எனவே தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுகிறது.

**பொருத்தம்:**

ஒற்றுமை : தீயும் சுடும், நாவும் சுடும்
வேற்றுமை : தீக்காயம் ஆறிவிடும், தீச்சொல்லால் ஏற்பட்ட மனக்காயம் ஆறாது
எனவே இது வேற்றுமை அணி ஆகும்.

**சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.**

***(அல்லது இப்படியும் கேட்கலாம்)***

**சொற்பொருள் பின்வருநிலையணியை சான்று தந்து விளக்குக.**

**அணி இலக்கணம்:**

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

(எ.கா): **வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.**

**விளக்கம்:**

செயலின் வலிமை, தன் வலிமை, பகைவலிமை, துணைசெய்வார் வலிமை ஆகியன சீர்தூக்கி ஆராய்ந்து செயல்பட வேண்டும்.

**பொருத்தம்:**

இக்குறட்பாவில் 'வலி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து 'வலிமை' என்ற ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

3) **இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்.- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**அணிச்சுட்டல்:**

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி, **சொற்பொருள் பின்வருநிலையணி** ஆகும்.

**அணி இலக்கணம்**

உவமை, உவமேயம் என்று வேறுபடுத்தாமல் உவமையைப் பொருளின் மேல் ஏற்றிக் கூறுவது உருவக அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

*இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*
*பார்தாக்கப் பக்கு விடும்.*

**பொருள்:**

இரத்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, இல்லை என்ற பாறை மோதினால் உடைந்துவிடும்.

**விளக்கம் :**

இக்குறட்பாவில் இரந்து வாழ்தல் என்பது பாதுகாப்பற்ற படகாகவும், வைத்திருந்தும் இல்லை என்பது பாறையாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளதால், இது உருவக அணி ஆகும்.

**உருவக அணியை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.**

**அணி இலக்கணம்**

உவமை, உவமேயம் என்று வேறுபடுத்தாமல் உவமையைப் பொருளின் மேல் ஏற்றிக் கூறுவது உருவக அணி ஆகும்.

**எடுத்துக்காட்டு :**

*இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*
*பார்தாக்கப் பக்கு விடும்.*

**பொருள்:**

இரத்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, இல்லை என்ற பாறை மோதினால் உடைந்துவிடும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**விளக்கம்** :

இக்குறட்பாவில் இரந்து வாழ்தல் என்பது பாதுகாப்பற்ற படகாகவும், வைத்திருந்தும் இல்லை என்பது பாறையாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளதால், இது உருவக அணி ஆகும்.

**4) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து. இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

**அணி சுட்டல்** :

இக்குறட்பாவில் **பிறிதுமொழிதல் அணி** பயின்று வந்துள்ளது.

**அணி இலக்கணம்** :

உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதலணியாகும்.

**எடுத்துக்காட்டு** :

*இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து.*

**அணி விளக்கம்** :

* **உவமை**: சிறியதாக இருக்கும்போதே முள் மரத்தைக் கொன்றுவிடுக! வளர்ந்து விட்டால் வெட்டுபவரின் கையையே குத்திக் கொல்லும்

* **பொருள்** : பகை சிறியதாக இருக்கும்போதே சரிசெய்து விடுக. பகை வளர்ந்து விட்டால் நமக்கே ஆபத்தாகிவிடும்

**பொருத்தம்**:

* இவ்வாறு உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைத்துள்ளதால் இது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

**பிறிதுமொழிதல் அணியை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.**

**அணி இலக்கணம்** :

உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதலணியாகும்.

**எடுத்துக்காட்டு** :

*இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து.*

**அணி விளக்கம்** :

* **உவமை**: சிறியதாக இருக்கும்போதே முள் மரத்தைக் கொன்றுவிடுக! வளர்ந்து விட்டால் வெட்டுபவரின் கையையே குத்திக் கொல்லும்

* **பொருள்** : பகை சிறியதாக இருக்கும்போதே சரிசெய்து விடுக. பகை வளர்ந்து விட்டால் நமக்கே ஆபத்தாகிவிடும்

**பொருத்தம்**:

* இவ்வாறு உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைத்துள்ளதால் இது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

## இலக்கிய நயம் பாராட்டல் *(மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)*

**மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! - ஒரு**
**வெள்ளியோடம் போல வரும் வெண்ணிலாவே!**
**வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! - மீண்டும்**
**வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!**
**கூகை ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே! - பகல்**
**கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!**
**பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! - நீயும்**
**பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!** **- கவிமணி**

**மையக்கருத்து** :

நிலவு வளரும், தேயும் , பகலில் கண்ணில் படாது, மண்ணிற்கு வராது. இவற்றிற்கு கவித்துவமான காரணத்தைத் தருவதே இப்பாடலின் மையக் கருத்தாகும்.

**தொடை நயம்**:

தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.
மோனை, எதுகை, இயைபு, முரண் எனத் தொடை பல வகைப்படும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**மோனை:**

பாடலில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

சான்று : **வ**ளர்ந்து - **வா**டி,
**ப**ந்தடிப்போம் - **பா**ரில் ,
**கூ**கை - **கூ**ட்டினில்

**எதுகை:**

பாடலில் முதல் எழுத்து அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

சான்று : வ**ள**ர்ந்து - வ**ள**ர்ந்து

**இயைபு:**

செய்யுளில் இறுதி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு

சான்று :

வெண்ணிலா**வே** - வெண்ணிலா**வே**

**இலக்கிய நயம் பாராட்டுக (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)**

**பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்;**
**மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்.**
**கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி**
**காட்சி கெடுத்திட லாமோ?**
**பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்**
**பேதமை யற்றிடும் காணீர் - பாரதியார்**

**மையக் கருத்து:**

பெண்கள் அறிவை வளர்க்க கல்வி அளிக்க வேண்டும் . அதனால் உலகமே வெளிச்சம் பெறும் என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**தொடை நயம்:**

தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.
எதுகை, மோனை, இயைபு, முரண் எனத் தொடை பல வகைப்படும்.

**மோனை :**

பாடலில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

சான்று :
**பெ**ண்ணுக்கு - **பே**ணி
**ம**ண்ணுக்குள்ளே - **மா**தர்
**க**ண்கள் - **கா**ட்சி
**பெ**ண்கள் - **பே**தமை

**எதுகை:**

பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும். சான்று :

பெ**ண்ணு**க்கு - ம**ண்ணு**க்குள்ளே
க**ண்**கள் - பெ**ண்**கள்

**இயைபு:**

செய்யுளில் இறுதி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு

. சான்று :

கண்**கள்** - பெண்**கள்**

**இலக்கிய நயம் பாராட்டுக.**

| | |
|---|---|
| செந்நெலும் கரும்பும் விளைந்தனவே -- நல்ல<br>தேன்பொழி மலர்களும் விரித்தேன்<br>இன்னலும் பசியும் போயொழிக -- தேசம்<br>எழிலுடன் கூடியே நலமுறுக<br>பிரிவுகள் பேசியே பூசலிட்ட -- பழம்<br>பேதமை தனைத்தள்ளி அனைவருமே<br>ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்<br>ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம் | தமிழன் திருநாள் பொங்கலென்றால் -- அதில்<br>தமிழன் பண்புகள் பொங்குமன்றோ?<br>புவியெலாம் சேர்ந்தொரு வீடிதிலே - யாரும்<br>புறம்பிலை என்றசொல் தமிழன்றோ?<br>யாதும் ஊரெனச் சாற்றியதும் - மக்கள்<br>யாவரும் கேளிர் என்றதுவும்<br>மேதினிக் குரைத்தவர் நம்முன்னோர் - இன்று<br>வேற்றுமை நாமெண்ணல் சரியாமோ?<br>- பெ.தூரன் |

**மையக்கருத்து:**

இயற்கை வளம் நிறைந்த நம் நாட்டில் வேற்றுமை அகன்று உலகில் அனைவரும் ஒன்று என்ற ஒற்றுமை எண்ணம் வளரவேண்டும் என்கிறார் ஆசிரியர்.

**தொடை நயம்:**

தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.
எதுகை, மோனை, இயைபு, முரண் எனத் தொடை பல வகைப்படும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**மோனை:**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது **மோனை.**

எ.கா: **பி**ரிவுகள் - **பே**தமை
**ஒ**ரு தனி - **ஒ**ற்றுமை
**த**மிழன் - **த**மிழின்
**பு**வியெலாம் - **பு**றம்பிலை
**யா**தும் - **யா**வரும்

**எதுகை**

செய்யுளில் அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
எ.கா: **தமி**ழன் - **தமி**ழின்

**இயைபு:**

செய்யுளில் இறுதி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு
எ.கா: விளைந்தன**வே** - விரிந்தன**வே**
வந்**திடுவோம்** - செய்**திடுவோம்**
பொங்கும**ன்றோ** - தமிழ**ன்றோ**

**இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)**

**தண்டலை மயில்க ளாட தாமரை விளக்கந் தாங்க**
**கொண்டல்கள் முழவி னேங்க குவளைகண் விழித்து நோக்க,**
**தெண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.**

**மையக் கருத்து:**

மருத நிலத்தின் இயற்கைக் காட்சியை மேடை மேல் நடக்கும் கலை நிகழ்ச்சியாக கம்ப காட்சிப்படுத்துவதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**தொடை நயம்:**

தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.
எதுகை, மோனை, இயைபு, முரண் எனத் தொடை பல வகைப்படும்.

**மோனை :**

பாடலில் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனையாகும்.
சான்று : **த**ண்டலை - **தா**மரை
**கொ**ண்டல்கள் - **கு**வளை
**தெ**ண்டிரை - **தே**ம்பிழி

**எதுகை:**

பாடலில் முதல் எழுத்து அளவொத்து, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகையாகும்.
சான்று : த**ண்**டலை - கொ**ண்**டல்கள் - தெ**ண்**டிரை - வ**ண்**டுகள்

**இயைபு:**

செய்யுளில் இறுதி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு
எ.கா: காட்**ட** - பா**ட**
கொண்டல்**கள்** - வண்டு**கள்**

**இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)**

**சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்**
**சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?**
**பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்**
**பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?**
**இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்**
**எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்**
**நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட**
**நிச்சயம் சுதந்திரம் அதுவேண்டும்.** - **நாமக்கல் கவிஞர்.**

**மையக்கருத்து**

சுதந்திரம் இல்லையென்றால் வாழ்வில் நாம் எந்தச் சுகத்தையும் பெறவோ, அனுபவிக்கவோ முடியாது. என சுதந்திரமே இன்றியமையாதது என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**தொடை நயம்**

தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்பது பழமொழி.
எதுகை, மோனை, இயைபு, முரண் எனத் தொடை பல வகைப்படும்.

**மோனை :**

பாடலில் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனையாகும்.
சான்று : **சு**தந்திரம் - **சு**கம்தரும்
**ப**தம்தரும் - **பா**ர்த்தால்
**இ**தம்தரும் - **எ**ல்லாம்
**நி**தம்தரும் - **நி**ச்சயம்

**எதுகை :**

பாடலில் முதல் எழுத்து அளவொத்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

சான்று : சுதந்திரம் - பதம்தரும் –
இதம்தரும் - நிதம்தரும்

**இயைபு:**

செய்யுளில் இறுதி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு

எ.கா: வேறுண்டோ - கீழன்றோ
**இதம்தரும் – நிதம்தரும்**

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.**

ஆசிரியப்பாவிற்குரிய பொது இலக்கணம் :

* அகவலோசை கொண்டது.
* எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வரும்.
* இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.
* ஆசிரியத்தளை மிகுந்தும் பிறதளை கலந்தும் வரும்.
*

**கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?**
**கலைச்சொற்கள்:**

ஒரு மொழியில் காலத்திற்கேற்ப, துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புகளுக்காக உருவாக்கிப் பயன்படுத்தப்படும் சொற்கள், 'கலைச்சொற்கள்' எனப்படும்.

**கலைச் சொல்லாக்கம் :**

கலைச் சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்கியும் தருவதாகும்.

**அகராதி:**

பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவதே அகராதியின் நோக்கம்.

இவையே கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

**நாச்செற்று விக்குள்மேல் வாரா முன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும் இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாச்/செற்/று | நேர் / நேர் / நேர் | தேமாங்காய் |
| விக்/குள்/ மேல் | நேர் / நேர் / நேர் | தேமாங்காய் |
| வா/ரா/முன் | நேர் / நேர் / நேர் | தேமாங்காய் |
| நல்/வினை | நேர் / நிரை | கூவிளம் |
| மேற்/சென்/று | நேர் / நேர் / நேர் | தேமாங்காய் |
| செய்/யப் | நேர் / நேர் | தேமா |
| படும் | நிரை | மலர் |

இக்குறட்பா மலர் என்னும் வாய்பாட்டில் முடிந்துள்ளது.

## உரைநடை - 4 மதிப்பெண் வினாக்கள் 2 x 4 = 8

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிசையில் படிக்கவும்

**1) ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?**

* பேச்சுக்கலை குறித்து நூல்கள் கூறும் விதிகளை ஜீவா, ஒரு போதும் பின்பற்றியதில்லை. அவர் பாணி, கடன் வாங்கியதோ , கற்றுக் கொண்டதோ அல்ல.
* 'பேச்சுக்கலை' என்பது ஜீவா பெற்ற வரம்!
* ஜீவாவின் பேச்சு அழகாகவும் நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.
* மக்கள் தரத்தையும், அனுபவ அறிவையும், பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நன்றாக அறிந்தவர், ஜீவா.
* உழுது விதைத்தால் நல்ல அறுவடை காணமுடியும் என்பதை உணர்ந்தவர் ஜீவா!

**2) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா?- நும் கருத்தை எழுதுக.**

* வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமே!
* நம் முன்னோர்கள் எந்த வேதியியல் பூச்சிக்கொல்லியையும் பயன்படுத்தவில்லை.
* வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாவற்றையும் நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்து, அதைத் தெளித்தால் போதும். பூச்சிகள் எல்லாம் போய்விடும்.
* பயிர்கள் பாதுகாக்கப்படும்.மண்புழுக்களும் பாதுகாக்கப்படும்.
* எனவே வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமே!

**3) மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

* மனித சமூகத்தின் ஆதி நிலம், மலை.
* "சேயோன் மேய மைவரை உலகம்" - தொல்காப்பியம்.
* "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ" - திருமுருகாற்றுப்படை.
* மலை நிலத்தைத் தமிழ் இலக்கியம் 'குறிஞ்சி' என்று குறிப்பிடுகிறது.
* திராவிடர்களை 'மலைநில மனிதர்கள்' என்கிறார், கமில் சுவலபில்

**4) திராவிடர்களின் மலைக் குடியிருப்புகள் பற்றி எழுதுக.**

* திராவிடர்களின் மலைக் குடியிருப்புகள், அப்பழங்குடியினரின் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக்கூறுபாடுகளை விளக்குகின்றன.
* ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர்.
* நீலகிரி தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதினர்.
* குறும்பர் மொழியில் தாழ்வாரத்தை 'மெட்டு' என்ற சொல்லால் குறிப்பர்.

**5) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.**

ஆனந்தரங்கருடைய நாட்குறிப்பு 25 ஆண்டு காலத்தென்னிந்திய வரலாற்றை வெளிப்படுத்துகிறது.

* பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையைப் பெற்றது,
* பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர்தொனே சென்னையைக் கைப்பற்றியது,
* ஆம்பூர்ப்போர்,
* தஞ்சைக்கோட்டை முற்றுகை,
* இராபர்ட் கிளைவின் படையெடுப்பு

ஆகிய வரலாற்றுச் செய்திகளை, நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.

**6) ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?**

**ஃபிரெஸ்கோ ஓவியங்கள்**

* ஃபிரெஸ்கோ என்ற இத்தாலியச் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள்.
* சுண்ணாம்புக் காரைப்பூச்சுமீது அதன் ஈரம் காயும்முன் வரையப்படும் பழமையான ஓவியக் கலைநுட்பம் இது.
* எடு - அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணலாம்.

**கற்றளிக் கோயில்கள்:**

* செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவது போல் கருங்கற்களை அடுக்கிக் கட்டும் கோயில் கற்றளிக் கோயில்கள் ஆகும்.
* சான்றுகள் : மகாபலிபுரம் கடற்கரைக் கோவில்,காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில்,தஞ்சைப் பெரிய கோவில்.

**7) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.**

**சமணப் பள்ளி:**

* சமண சமயத்தின் அறக்கொடைகள் - கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் .
* திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் வாழ்ந்தனர். அங்கிருந்தே கல்வியையும் சமயக்கருத்துகளையும் மாணவர்களுக்குக் கற்பித்தனர்.
* சமண, பௌத்த சமயங்களின் கொடை - பள்ளி என்னும் சொல்.
* 'பள்ளி' என்ற சொல்லுக்குப் 'படுக்கை' என்று பொருள்.

**பெண்கல்வி:**

* வந்தவாசி அருகிலுள்ள வேடல் என்னும் ஊரில், சமணப்பெண் ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தார்.
* விளாப்பாக்கம் எனும் ஊறில், பட்டினிக்குரத்தி என்னும் சமணப்பெண் ஆசிரியர் சமணப் பள்ளி நடத்தினார்.
* சமணப் பள்ளிகளில் பெண்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர்.
* பெண்களுக்கு மட்டும் கல்வி கற்பிக்கும் சமணப்பள்ளிகள் 'பெண்பள்ளிகள்' என்று அழைக்கப்பட்டன.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**8) தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.**

**தமிழ் இலக்கியங்களில் கல்வி :**

* தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை **ஓதற்பிரிவு** என்று சொல்கிறது.
* கல்வியின் பொருட்டு ஒருவருக்குப், 'பெருமிதம்' தோன்றும் - தொல்காப்பியம் கூறுகிறது.
* தொல்காப்பியமும் நன்னூலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன.

**கல்வியின் சிறப்பு :**

"துணையாய் வருவது தூயநற் கல்வி" - திருமந்திரம்.
"கல்வி அழகே அழகு" - நாலடியார்
"இளமையில் கல்" - ஔவையார்.

**9) தாமஸிகம் என்றால் என்ன?**

* நாகரிக வழக்கத்தில் சீக்கிரமே வாடிவிடும் மலர்களுடன் மட்டும் தொடர்பு உண்டு.
* தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச்செப்பினுள் போவதும் வருவதும் தான் அவற்றின் வேலை.
* இதைத்தான் "தாமஸிகம்" என்பர். அதாவது 'பொருள் முதல் வாதம்'.
* நமது நாட்டில் உள்ள பூக்கள் அனைத்தையும் நாம் நம் மனத்தினுள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**10) கூற்று : குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று. நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.**
**கவிதை : கூண்டு திறந்தது சிறகடிக்கவா?**
**இல்லை! சீட்டெடுக்க.**
**கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?**

* ஒன்றை மற்றொன்றால் உணர்த்துவதே குறியீடு.
* குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று. நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.
* கிளியைக் கூண்டில் அடைத்து வைத்துச் சோதிடம் பார்ப்பார்கள்.
* கூண்டைத் திறப்பது கிளி பறப்பதற்காக அல்ல; சீட்டெடுப்பதற்கு என அடிமைகளின் வாழ்வியல் கூறப்படுகிறது

## செய்யுள் 4 மதிப்பெண் வினாக்கள் 2 x 4 = 8

**1) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?**

* சிறு வாய்க்கால், நமக்கு உணவு அளிக்கும் வயலுக்குப் பயன்படுகிறது.
* அலைகடலை மலையாகவும், மலையை அலைகடலாகவும் மாற்றுகிறது.
* கூழாங்கற்களை நெறுநெறு என அரைத்து நுண்மணலாக மாற்றுகிறது.
* நீரை ஆவி, மேகம், மழை, அருவியாக மாற்றுகிறது.
* தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருக்கிறது.

இவையே, வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன ஆகும்.

**2) சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.**

* இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டு மக்களைக் கண்போல் பாதுகாத்தான்.
* சேரநாட்டு மக்கள் பசி, பிணி அறியாதவர்கள். பகைவர்கள் இல்லாத நாடு, சேர நாடு.
* சேரலாதன், சான்றோர்களுக்கு அரிய பொருள்களைக் கொடையாய் வழங்குவான்.
* புது வருவாய்ப் பெருக்கமும் ஈத்துவக்கும் இன்பமும் உடையவன், சேரலாதன்.
* எனவே அவனுடைய நாட்டில் எப்போதும் விழாக்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.

இக்காரணங்களால், சேரநாடு செல்வ வளமிக்க நாடாக விளங்கியது.

### புரட்சிக் கவி

**3) "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம் :**

பாரதிதாசன் இயற்றிய "புரட்சிக் கவி" என்னும் நூலில் உதாரன், "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" என்று கூறுகிறான்.

**பொருள் :**

தான் மரணதண்டனை பெறுவதற்குத் தமிழ்தான் காரணம் என்று சமுதாயம் நினைத்து விடக்கூடாது என்று, குற்றமில்லாத உயர்வான தமிழை உயிர் என்று போற்ற வேண்டும் என்று கூறுகிறான் உதாரன்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**விளக்கம் :**

தொழுநோயாளி என்று அறிமுகப்படுத்தப்பட்ட அமுதவல்லிக்குப் பார்வையற்றவன் என்று கூறப்பட்ட உதாரன், கவிதை எழுதக் கற்பித்தான்.

அவர்கள் இருவரும் இறுதியில் காதல் கொண்டனர். அதனால், மரண தண்டனைக்கு உள்ளாகி, இருவரும் கொலைக்களம் கொண்டு செல்லப்பட்டனர்.

தான் மரணதண்டனை பெறுவதற்குத் தமிழ்தான் காரணம் என்று இந்தச் சமுதாயம் நினைத்து விடக்கூடாது என்று குற்றமில்லாத உயர்வான தமிழை உயிர் என்று போற்ற வேண்டும் என்று கூறுகிறான் உதாரன்.

**நற்றிணை** - போதனார்

**4) 'ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

போதனார் இயற்றிய நற்றிணைப் பாடலில், இத்தொடர் இடம்பெற்றுள்ளது.

**பொருள்:**

* தேன் கலந்த பால் உணவினை உண் அங்குமிங்கும் ஓடி விளையாட்டு காட்டிய பெண்ணாய் இருந்தவள், இப்போது இத்தகைய அறிவையும் ஒழுக்கத்தையும் எங்குக் கற்றாளோ? என்று செவிலித்தாய் வியக்கிறாள்.

**விளக்கம் :**

* ஒரு கையில், தேன் கலந்த பால் உணவைப் பொன் கிண்ணத்தில் வைத்துக் கொண்டு,
* இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான கோல் வைத்துக் கொண்டு, உண்கிறாயா? இல்லையா? என மிரட்டுவோம்
* அப்போது, வீட்டைச் சுற்றி ஓடி, 'நான் உண்ண மாட்டேன்' என்று மறுப்பாள்.
* அவளைப் பிடிக்க முடியாமல், செவிலித்தாய் களைத்துப் போவார்.
* இப்படி விளையாட்டு காட்டிய நம் மகள், தான் மணந்துகொண்ட கணவனுடன் வறுமை நிலையிலும், தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவைப் பற்றி நினைக்கவில்லை.
* ஓடுகின்ற நீரிலே இருக்கும் மணல் போல் உணவு கிடைத்த பொழுது உண்கிறாள்.

இத்தகைய அறிவையும், ஒழுக்கத்தையும் எங்குக் கற்றாளோ? என்று வியப்பாக உள்ளது! என்று தலைவி இல்லறம் ஆற்றும் சிறப்பைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறுகிறாள்.

**அகநானூறு - வீரை வெளியன் தித்தனார்**

**5) மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?**

* மேகக் கூட்டமே! வானம் இருள உலாவுகிறாய். போர் முரசம்போல் முழங்குகிறாய். போர்க்களத்தில் போர்வீரன் சுழற்றும் வாள்போல் மின்னுகிறாய்.
* முழக்கமும் மின்னலுமாக வெறும் ஆரவாரம் செய்கிறாயா அல்லது மழை பொழிவாயா?
* தம் தோழியர் கூட்டத்தோடு தலைவி தம் வீட்டிற்குப் பின் உள்ள வயலில், பறவைகளை விரட்டித் தினைப்புனம் காப்பாள்.
* அங்கேயும் நீ மழை பொழிவாயா?" என்று தோழி குறிப்பாக உணர்த்துகிறாள்.
* தலைவி தினைப்புனம் காக்கும் இடத்துக்குத் தலைவன் வரலாம் என்பது இதில் அமைந்த இறைச்சிப் பொருளாகும்.

**6) நூல் ஒன்றின் முகவுரையில் இடம் பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?**

**பொதுப் பாயிரம்**

* நூலின் இயல்பு
* ஆசிரியர் இயல்பு
* கற்பிக்கும் முறை
* மாணவர் இயல்பு
* கற்கும் முறை

**சிறப்புப் பாயிரம்:-**

* நூலாசிரியர் பெயர்
* நூல் பின்பற்றிய வழி
* நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
* நூலின் பெயர்
* நூலின் யாப்பு
* நூலில் குறிப்பிடப்படும் கருத்து
* நூலைக் கேட்போர்
* நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்

* நூல் இயற்றப்பட்ட காலம்
* நூல் அரங்கேற்றப்பட்ட அவைக்களம்
* நூல் இயற்றப்பட்டதற்கான காரணம்

7) **காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகியபெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?**

**காற்றில் ஆடும் புல்வீடுகள் - தூக்கணாங்குருவிக் கூடுகள்:**

தூக்கணாங்குருவிகளின் கூடுகளையே காற்றில் ஆடும் புல்வீடுகள் என்று அழகிய பெரியவன் ஒப்பிடுகிறார்.

**காரணம் :**

* முன்பெல்லாம் அடைமழைக் காலத்தில் ஆற்றில் நீர் புரளும்.
* கரையெல்லாம் பெரிய மரங்கள் காணப்படும்.
* அம்மரங்களில் தூக்கணாங்குருவிகள் நீண்ட புல்லாலான கூடுகள் கட்டி வாழும்.
* காற்றில் அக்கூடுகள் ஆடுவதைக் கண்ட அழகிய பெரியவன், 'காற்றிலாடும் புல் வீடுகள்' என்று ஒப்பிடுகிறார்.

8) **"சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :**

பெரியவன் கவிராயர் எழுதிய 'திருமலை முருகன் பள்ளு' என்னும் நூலில் வடகரை நாட்டின் இயற்கை வளத்தைக் கூறும் பாடலில் இவ்வரி இடம் பெற்றுள்ளது.

**பொருள்:**

தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.

**விளக்கம் :**

* வடகரை நாட்டில் மலர்களை மொய்க்கும் வண்டுகள் 'இந்தளம்' என்ற இராகம் பாடும்.
* மதகுகளில் கட்டப்பட்டிருக்கும் சங்கிலியில் மீனைப் பிடிக்க வந்த உள்ளான் பறவை, அந்த வண்டின் இசையைக் கேட்டு வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.
* அதனால், தாமரைத் தடாகத்தில் கயல் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.
* இத்தகைய நீர்வளம் நிறைந்த நாடு வடகரை நாடு.

9) **சிங்கி பெற்ற பரிசுப் பொருள்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?**

சிங்கி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று குறி கூறியதால் பெற்ற பரிசுப் பொருட்கள்:

* சேலத்து நாட்டில் பெற்ற பரிசு - சிலம்பு
* கலிங்க நாட்டில் பெற்ற பரிசு - முறுக்கிட்ட தண்டை
* பாண்டியனார் மகளிடம் பெற்ற பரிசு – பாடகம்
* குற்றாலநாதர் சந்நிதியிலுள்ள பெண்களிடம் பெற்ற பரிசு - அணிமணிக் கெச்சம்
* கண்டிய தேசத்தில் பெற்ற பரிசு - காலாழி

10) **தமிழகப் பெண்கள் பாடிக்கொண்டே விளையாடும் போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?**

* சாழல் என்பது பெண்கள் விளையாட்டு.

வினா : சுடுகாட்டைக் கோயிலாகவும், புலித்தோலை ஆடையாகவும் கொண்ட சிவபெருமான் தாயும் தந்தையும் இல்லாதவர். இவர்தான் உங்கள் கடவுளா ?

விடை : எங்கள் கடவுளுக்குத் தாய் தந்தை இல்லை என்றாலும், அவர்க்குக் கோபம் வந்தால் உலகமே கற்பொடியாகிவிடும்.

வினா : பாற்கடலைக் கடைந்தபோது உண்டான நஞ்சை எதற்காகச் சிவபெருமான் உண்டார் ?

விடை : அந்த நஞ்சை இறைவன் உண்டிருக்காவிட்டால், பிரமன், திருமால் முதலான தேவர்கள் எல்லாரும் அன்றே அழிந்திருப்பார்கள்.

வினா : தான் முடிவு இல்லாதவனாக இருந்தும், தன் அடியார்களை ஆனந்த வெள்ளத்தில் அழுத்தினான் உங்கள் இறைவன். இது என்ன புதுமை ?

விடை : ஆனந்த வெள்ளத்தில் அழுத்திய அவரது திருவடிகள் தேவர்களுக்கு மேலான பொருளாகும்.

11) **சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

* தமிழ்த்தாயே ! நெற்றியில் இடப்பட்ட திலகம் போல் அழகானவளே !
* உனது அடிகளை வணங்கியவர், உழுதவர், விதைத்தவர், வியர்வை சிந்தியவர்க்கெல்லாம், செல்வம் தந்தவளே!
* உன்னை வாழ்த்திப் பல்லாண்டு பல்லாண்டு பாடத்தான் வேண்டும்.
* காற்றிலே ஏறி, கடலை, நெருப்பாற்றை, மலை உச்சியைத் தாண்டி செல்லும் பாடலைப் பாடத்தான் வேண்டும்.
* கபாடபுரமே அழிந்த பின்னும், காலத்தால் அழியாமல் இருக்கும் மொழி தமிழ்மொழி.
* அதன் சிறப்பைப் பாடத்தான் வேண்டும் என்று சு. வில்வரத்தினம் குறிப்பிடுகிறார்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**12) 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.**

* குழந்தையாக இருக்கும்போது என்னைப் பேசவைத்த மொழி.
* அறிவைத் தந்த மொழி.
* திருக்குறளைத் தந்த மொழி,
* சங்கம் வைத்து வளர்ந்த மொழி.
* இனிய இசைப்பாடல்கள் உள்ள மொழி.
* என் தாய்மொழி, தமிழ். அது என் உயிருக்கு நேர்.

## செய்யுள் 6 மதிப்பெண் வினா 1 x 6 = 6

**1) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**குறிப்புச் சட்டம் :**

* முன்னுரை
* மாளிகை நகரம்
* கொடை நகரம்
* மனை நகரம்
* மாநகரம்
* செம்மை நகரம்
* முடிவுரை

**முன்னுரை :**

மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளை இங்குக் காண்போம்.

**மாளிகை நகரம் :**

மதீனா நகரின் மேல்மாடங்கள் மேருமலை போல் உயர்ந்திருந்தன

மதீனா நகரின் மக்கள் ஆரவாரம், பெருங்கடல் ஒலி போல் இருந்தது.

மதீனா நகரின் வீதிகள் பிரபஞ்சம் போல் பரந்து விரிந்திருந்தன.

மதீனா நகரின் பெரிய மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

அதனால், மதீனா நகரம் "**ஒரு மாளிகை நகரம்**" ஆகும்.

**கொடை நகரம் :**

மதீனா நகரில் எந்தப் பொருளும் இல்லையென்று சொல்வதற்கு இல்லை. அங்குக் கேட்போர்க்கு வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டோர் நிறைந்திருந்தனர். அவ்வள்ளல்களிடமிருந்து கலைஞர்களும் மறையவர்களும் தாம் எண்ணிய பொருள்வளத்தைப் பெற்றுக் கொண்டனர்.

அதனால், மதீனா நகரம் "**ஒரு கொடை நகரம்**" ஆகும்.

**பொன்னகரம் :**

தோரணங்களும் கொடிகளும் மதீனா நகரின் வீதிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

மதீனா நகரம் பொன் போல் பொலிந்தது.

அதனால், மதீனா நகரம் "ஒரு பொன்னகரம்" ஆகும்.

**மனை நகரம் :**

மதீனா நகரத்தில் வெண்மையான மாளிகைகள் ஒளிர்ந்தன;

மதீனா நகரம், திருமண வீடு போன்று பொலிந்தது.

அதனால், மதீனா நகரம் "ஒரு மனை நகரம்" ஆகும்.

**மாநகரம் :**

குறைவில்லாத செங்கோல் ஆட்சி போல் பகை, வறுமை, நோய் முதலியவை இன்றி மிகுந்த பொலிவுடன் இருந்தது மதீனா நகரம்.

அதனால், மதீனா நகரம் "ஒரு மாநகரம்" ஆகும்.

**செம்மை நகரம் :**

மதீனா நகரில்

காய்த்தது : வெற்றியும்,ஊக்கமும் காய்த்திருந்தன.

பழுத்தது : செல்வம் பழுத்திருந்தது.

அதனால், மதீனா நகரம் "ஒரு செம்மை நகரம்" ஆகும்.

**முடிவுரை :**

இவையே, மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகள் ஆகும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**2) 'அடக்கமுடைமை' ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.**

**முன்னுரை:**

அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் என்பதை முப்பால் வழிக் காண்போம்

**அடக்கத்தின் சிறப்பு**

* தன் இயல்பான வாழ்வு நிலையிலிருந்து மாறுபடாமல் அடக்கத்தோடு இருப்பவனின் உயர்வு, மலையின் உயர்வைக் காட்டிலும் பெரியதாகும்.
* ஒருவர் எதனைக் காத்துக்கொள்ளாவிட்டாலும் தன் நாவை மட்டுமாவது காத்துக்கொள்ளவேண்டும். அப்படிக் காத்துக்கொள்ளாவிட்டால், பேசும் சொற்களில் குற்றம் உண்டாகித் துன்பப்படுவர்.
* தீயினால் சுட்டது வெளியே தெரியும் உள்ளே ஆறிவிடும். ஆனால்,
* நாவினால் சுட்டது வெளியே தெரியாது உள்ளே ஆறாமல் வடுவாக இருக்கும்.
* எனவே தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுகிறது.

**முடிவுரை:**

எனவே , அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் என்று முப்பால் கூறுகிறது.

**"3) நடைப்பயணிகளின் வழி நடைப்பாடல்களாகக் காவடிச்சிந்து உள்ளது. - இக்கூற்றை அண்ணாமலையார் பாடல் வழி மதிப்பீடு செய்க.**

**அல்லது**

**காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடல் - இக்கூற்றை அண்ணாமலையார் பாடல் வழி மதிப்பீடு செய்க. "**

**குறிப்பு சட்டகம்** :

* காவடிச்சிந்து
* முருகன் பெருமை
* கோவில் வளம்
* அடியார் கூட்டம்
* முடிவுரை

**காவடிச்சிந்து** :

* தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கில் உள்ள இசைமரபே காவடிச்சிந்து ஆகும்
* உலகெங்கும் வாழும் தமிழர்கள் முருகன் கோயில்களுக்கு ஆடல் பாடலுடன் காவடி எடுத்துச் செல்வார்கள்.
* அவர்களின் வழிநடைப் பாடல் வகைகளிலிருந்து காவடிச்சிந்து தோன்றியது.

**முருகன் பெருமை** :

* **சென்னிகுளம் அண்ணாமலையார்**, கழுகுமலை முருகன் மீது முதன்முதலில் **காவடிச்சிந்து** பாடினார்.
* இவர் '**காவடிச்சிந்தின் தந்தை**' என்று போற்றப்படுகிறார்.
* அவரது **காவடிச்சிந்து, தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகத்** திகழ்கிறது.

**கோவில் வளம்** :

* கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம், தேவர் உலகை விட உயர்ந்து ஒளிவீசுகிறது. அதனால், உலகில் பலருக்குக் கண்கள் கூசுகிறது.
* மீன், மகரம் போன்ற உருவங்கள் கொண்ட கொடிகள் முருகன் கோயிலில் உள்ளன.
* கழுகுமலை நகரின் கோட்டை உயரமானது.
* அதில் மேகங்கள் வந்து மோதி , மின்னல்கள் தோன்றுகின்றன.

**அடியார் கூட்டம்** :

* காவடி எடுக்கும் அடியவர்கள் பாடும் திருப்புகழ் முழக்கம், அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் காதுகளில் விழுகிறது.
* பக்தர்கள் தங்கள் களைப்பினை மறந்து ஆடிப்பாடி ஆலயங்களுக்கு நடந்து செல்லும்போது காவடிச் சிந்து பாடினார்கள்.

அப்படி வரும் பக்தர்கள் முருகன் அருளைப் பெறுவார்கள்;

**முடிவுரை** :

சென்னிகுளம் அண்ணாமலையார், காவடிச் சிந்து மூலம் முருகனின் பெருமை, கோவில் வளம், அடியார் கூட்டம் ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறுகிறார்

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**4) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.**

**வடகரை நாட்டின் இயற்கைவளம் :**

* வடகரை நாட்டில் மலர்களை மொய்க்கும் வண்டுகள் 'இந்தளம்' என்ற இராகம் பாடும்.
* மதகுகளில் கட்டப்பட்டிருக்கும் சங்கிலியில் மீனைப் பிடிக்க வந்த உள்ளான் பறவை, அந்த வண்டின் இசையைக் கேட்டு வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.
* அதனால், தாமரைத் தடாகத்தில் கயல் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்.
* இத்தன்மை கொண்ட திருமலையில் முருகப்பெருமான் இருக்கின்றார்.

இத்தகைய வளம் மிக்கது வடகரை நாடு ஆகும்.

**தென்கரை நாட்டின் இயற்கை வளம் :**

* தென்கரை நாட்டுச்சோலையில் உயர்ந்து வளரும் மரங்களின் மீது மேகங்கள் கூட்டமாகத் தங்கும்.
* பொன்மாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் வீசும்.
* இளம் பெண்கள் பொன்னாலான அரங்கில் நடிப்பார்கள்.
* இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.
* இத்தகைய வளம் மிக்கது தென்கரை நாடு ஆகும்.

**5) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.**

**முன்னுரை**

திருக்குறள் அறத்துப்பாலில் அமைந்துள்ள அதிகாரம் 'ஒப்புரவறிதல்' ஆகும்.
உலகின் இயல்பு அறிந்து, பயன் கருதாமல் பிறருக்கு உதவி செய்தலே ஒப்புரவு ஆகும்

**வேளாண்மை செய்தல் பொருட்டு**

ஒப்புரவு அறிந்தவர், தாம் பெருமுயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதியுடையார்க்கு உதவி செய்வதற்கே ஆகும்.

**உயிர்வாழ்வான்**

உலகில் உள்ளவர்களின் நிலையை அறிந்து, பிறருக்கு உதவி செய்து வாழ்பவனே உயிரோடு வாழ்பவன். மற்றவர்கள் எல்லாம் , இறந்தவர்களுள் ஒருவராகவே கருதப்படுவார்கள்.

**மருந்து மரம்**

மருந்து மரத்தின் எல்லா உறுப்புகளும் மருந்தாகப் பயன்படுதல் போல் பெருந்தகையாளனிடம் சேர்ந்த செல்வம் பலருக்கும் பயன்படும்.

**முடிவுரை**

இவையே கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளாகும்

**6) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?**

Refer செய்யுள் 4 மதிப்பெண் நற்றிணை ( 4 ஆம் கேள்வி )

**7) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.**

செய்யுள் ஆறு மதிப்பெண் கேள்விகள் 2,5 ஆகியவற்றிலிருந்து கருத்துகள் எழுதினால் போதும்

**8) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.**

Refer செய்யுள் 4 மதிப்பெண் நற்றிணை ( 6 ஆம் கேள்வி )

For all 11th Standard Study Materials, Previous Year Question Papers, Minimum Materials, One Mark Questions, Model Question Papers, Online Tests, Memory Tips, Customized Study Schedules, and Motivational Counselling and Guidance

**Contact 7358010037**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

## உரைநடை - 6 மதிப்பெண் கேள்விகள் 6 x 1 = 6

**1) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

முன்னுரை :

தனது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிப்பது மொழி.மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் உணரும் விதத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

மொழி

1. பேச்சுமொழி,
2. எழுத்துமொழி என இரு வகைப்படும்.

மொழி வெளிப்பாடு :

உடம்பின் பகுதியாக உள்ள தொண்டையிலிருந்து எழும் சொற்களை

* ஏற்றம்
* இறக்கம்
* உச்சரிப்பு
* வேகம்
* நிதானம்

ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பொருள் வேறுபாடு கொள்ள முடியும்

உறை பனிக்கட்டி :

* பேச்சுமொழி திரவ நிலை கொண்டது
* எழுத்து மொழி உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலை கொண்டது.

உணர்ச்சிக்கு மிக அருகில் :

* எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
* எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
* அதனால்தான் பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

நேரடி மொழி :

* பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற செயல்பாடு.
* பேச்சு என்பது மொழியில் நீந்துவது.
* பேச்சு மொழியில் , உடம்பின் வெளிப்பாடுகள் மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரும்.
* அதனால், கவிதைகளை எதிரில் இருப்பவருடன் பேசுவது போல் அமைக்கின்றனர். இதுவே 'நேரடி மொழி' ஆகும்.

நேரடி மொழியின் பண்புகள் :

* நேரடி மொழி எனப்படும் பேச்சு மொழிக்கு எப்போதும் பழையதாவதில்லை.
* அது வேற்றுமொழி ஆவதில்லை.
* எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டு இருக்கிறது.
* இது, ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதைக் காட்டுகிறது என்கிறார் மலையாளக்கவி ஆற்றூர் ரவிவர்மா.

முடிவுரை :

எனவே, நான் மொழியை வெளிப்படுத்தும் நிலையில், எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சு மொழியை எளிமையாக உணர்கிறேன்.

**2) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

அவையோர் அனைவருக்கும் வணக்கம்!

மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் **'உழவு உலகிற்கு அச்சாணி'** என்று வள்ளுவரும், **'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'** என்று பாரதியாரும் போற்றுகின்றனர். அத்தகைய வேளாண்மையில் இன்று இயற்கை வழியில் இருந்து விலகி, வேதியியல் உரங்களையும், பூச்சிக் கொல்லிகளையும் பயன்படுத்தியதால், மண் நஞ்சாகிவிட்டது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

நஞ்சாகிப் போன நிலத்தைச் சீர்செய்ய ஜப்பான் அறிஞர் **மசானபு ஃபுகோகா** கூறிய ஐந்து வேளாண்மை மந்திரங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். உழப்படாத நிலம், வேதியியல் உரம் இல்லாத உற்பத்தி, பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு, தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி, ஒட்டுவிதை இல்லாமல் உயர்விளைச்சல் ஆகிய அறிவுரைகளைக் கடைப்பிடித்தால் மண்ணை உயிர்பெறச் செய்யலாம்.

மேலும் மண்ணை வளம்பெறச் செய்ய தொழுஉரம் இட வேண்டும். மாட்டுச் சாணம், கோமியம் ஆகியவற்றைக் கலந்து வைக்கோலை மட்கச் செய்து உருவாக்கப்படுவது **தொழு உரம்** ஆகும். இதனை நாம் நன்செய் நிலத்துக்குத் தொழு உரமாக இடலாம்.

புன்செய் நிலத்துக்குக் காய்ந்த இலைச்சருகு, சாம்பல் ஆகியவற்றைக் கலந்து இட்டாலே போதும்.

வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகியவற்றை நன்றாக இடித்துக் கோமியத்தில் ஊற வைத்து அதைத் தெளித்தால் போதும். பூச்சிகள் எல்லாம் போய்விடும். பயிர்களும் பாதுகாக்கப்படுகிறது. மண்புழு பாதுகாக்கப்படுகிறது.

அன்று நம் முன்னோர்கள் இயற்கைமுறை வேளாண்மையைக் கையாண்டதால் ஆரோக்கியமாக வாழ்ந்தனர். இன்றோ வேதிக்கலப்புடைய பூச்சிக்கொல்லிகள், வேதியியல் உரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகின்றோம். இதனால் மண் வளம் குறைந்து, மக்கள் புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத் தன்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுத் துன்புறுகின்றனர்.

எனவே, நாம் விதைப்பதிலிருந்து விளைச்சல் முடியும் வரை வேதிக்கலப்பே இல்லாத இயற்கை வேளாண்மை செய்ய வேண்டும் என்பதே எனது உரையின் நோக்கம்

3) **இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க**

**மனிதன் தோன்றிய மலை நிலம்** :

* மனித சமூகத்தின் ஆதி நிலம், மலை. மலை நிலத்தைத் தமிழ் இலக்கியம் 'குறிஞ்சி' என்று குறிப்பிடுகிறது.
* மலை தமிழர்கள் வாழ்வில் மிகுந்த சிறப்பிடம் பெற்றுள்ளது.

**இயற்கையோடு இயைந்த வாழ்வு** :

* திராவிடர்களின் மலைக் குடியிருப்புகள், அப்பழங்குடியினரின் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக்கூறுபாடுகளை விளக்குகின்றன.
* ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர்.
* நீலகிரி தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதினர்.
* குறும்பர் மொழியில் தாழ்வாரத்தை 'மெட்டு' என்ற சொல்லால் குறிப்பர்.

**சொல் வழக்கு** :

* **மலை, வரை** முதலான சொற்கள் இந்தியா முழுதும் இடப் பெயர்களாக அமைந்துள்ளன.
* தமிழ் மொழியில் இருக்கும் 'மலை எனும் சொல், சமஸ்கிருதத்தில் மலய என்றும், ஆந்திராவில் மலா என்றும், கர்நாடகத்தில் மலே என்றும் வழங்கும்.

**திராவிடர்களின் மலைப்பெருமிதம்** :

* திராவிட நிலப்பகுதிகளில் காணப்படும் மலை தொடர்பான சொற்கள், சிந்துவெளிப் பண்பாட்டிலும் காணப்படுகின்றன.
* தமிழ் மொழியில் 'கோட்டை' என்ற சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.
* இந்தியாவில் '**கோட்டை**' என்று முடியும் 248 இடப்பெயர்களும் தமிழ்நாட்டில்தான் உள்ளன.

**முடிவுரை** :

இவற்றால், இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில், இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தமை புலப்படும்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

**4) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.**

**முன்னுரை:**

* கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம் என்பன சமண சமயத்தின் அறக்கொடைகள்.
* சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் சமண, பௌத்தப் பள்ளிகள் இருந்துள்ளன.

**சமண பௌத்தப் பள்ளிகள் :**

* சமண சமயத்தைச் சேர்ந்த திகம்பரத் துறவிகள் மலைக்குகையில் தங்கினர். அவர்கள் அங்கே கல்வியையும் சமயக்கருத்துகளையும் மாணவர்களுக்குக் கற்பித்தனர்.
* '**பள்ளி**' என்ற சொல்லுக்குப் '**படுக்கை**' என்று பொருள்.
* பள்ளி என்னும் சொல் சமண, பௌத்த சமயங்களின் கொடையாகும்.

**கல்வி கற்பித்தல் :**

* 'வேடல்' என்னும் ஊரில் பெண் சமணத் துறவி, 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்துள்ளார்.
* விளாப்பாக்கத்தில், பட்டினிக்குரத்தி என்னும் சமணப்பெண் ஆசிரியர், பள்ளியை நிறுவிக் கற்பித்துள்ளார்.

**மரபுவழிக் கல்வி :**

* மரபுவழிக் கல்வியில், 'குருகுலக் கல்வி' முறையில், மாணவர்கள் குருவோடு தங்கி, அவருக்குரிய பணிகளைச் செய்து கல்வி கற்றனர்.
* செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் ஆகியவை அடங்கியது இக்கல்விமுறை
* போதனா முறையைத் தாண்டி வாழ்வியலைக் கட்டமைப்பது.

**ஆங்கிலேயர் போற்றிய திண்ணைப்பள்ளி :**

* 19 - ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஊர்கள்தோறும் பெருமளவில் திண்ணைப் பள்ளிகள் இருந்தன.
* திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் **கணக்காயர்கள்** என்று அழைக்கப்பட்டனர்.
* இப்பள்ளிகளில் பாடத்திட்டம், பள்ளிநேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பம்.
* பொதுமக்களுடைய கல்வித்தேவையை இப்பள்ளிகள் ஓரளவேனும் நிறைவு செய்தன.

**முடிவுரை :**

இவையே, பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்விமுறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்கள் ஆகும்.

**5) சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**

**முன்னுரை :**

சுந்தர ராமசாமி எழுதிய 'காற்றில் கலந்த பேரோசை" என்னும் கட்டுரை ஜீவா என்ற ப.ஜீவானந்தத்தின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**ஜீவாவின் மரணச் செய்தி :**

* 1963 ஜனவரி மாதம் 18 ஆம் தேதி ஜீவாவின் மறைவுச் செய்தியைக் கேட்ட ஒருவர், "கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போதா?" என்று கேட்டார்.
* அரைமணி நேரத்திற்குப்பின் மற்றொருவர் இச்செய்தியைக் கேட்டதும் அதே கேள்வியைக் கேட்டார்.
* இத்தகைய எண்ணம் மக்கள் மனதில் பதியுமளவிற்கு ஜீவா மேடையில் வாழ்ந்த மனிதராவார்.

**மேடையில் வாழ்ந்த மனிதன் :**

* மக்கள் வெள்ளத்தின் முன்னால் மேடையில் நின்று சங்கநாதம் எழுப்பிக் கொண்டிருக்கும்போதே, அப்பேரோசையில் கலந்துவிடுவதே ஜீவாவின் முத்திரை கொண்ட மரணமாக இருக்கும்.
* மேடையில் வாழ்ந்த மனிதன், வாழ்ந்த இடத்தில்தானே மறைந்திருக்க வேண்டுமென, மக்களின் பேதை மனம் எண்ணுகிறது.

**நெஞ்சோடு வளர்ந்த கனவு :**

* ஜீவா தமக்கென ஒரு தத்துவத்தைப் படைத்துக் கொள்ளவில்லை. தான் நம்பிய தத்துவத்திற்காக வாழ்ந்தவர்.
* மனித வெள்ளத்தை மிக உயர்ந்த ஓர் எதிர்காலத்திற்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே நெஞ்சோடு வளர்ந்த ஒரு கனவு ஆகும்.


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**பேச்சு நடை :**

* பேச்சுக்கலை குறித்து நூல்கள் கூறும் விதிகளை ஜீவா, ஒரு போதும் பின்பற்றியதில்லை. அவர் பாணி, கடன் வாங்கியதோ , கற்றுக் கொண்டதோ அல்ல.
* 'பேச்சுக்கலை' என்பது ஜீவா பெற்ற வரம்!
* ஜீவாவின் பேச்சு அழகாகவும் நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.
* மக்கள் தரத்தையும், அனுபவ அறிவையும், பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நன்றாக அறிந்தவர், ஜீவா.
* உழுது விதைத்தால் நல்ல அறுவடை காணமுடியும் என்பதை உணர்ந்தவர் ஜீவா!

**இரண்டு கைப்பிடி விஷயம் :**

* 'வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' போல், ஜீவானந்தம் மேடைப்பேச்சு இருக்கும்.
* ஜீவானந்தம் இரண்டு கைப்பிடி விஷயத்துடன் மேடை ஏறுவார். வெடிமருந்துக்கு நெருப்பு வைத்ததும், பச்சை, மஞ்சள், சிவப்பு எனக் குடைகுடையாய் உதிர்வதுபோல், மாலை மாலையாய் இறங்கி வரும் கருத்து வண்ணஜாலம் அறிந்தவர் ஜீவா

**முடிவுரை :**

ஆற்றில் விழுந்த கிளை போல் இல்லாமல், எதிர்நீச்சல் போட்டவர் ஜீவா. பேச்சுக்கலை அவருடைய காலடியில் விழுந்து கிடந்தது. இவ்வாறு மேடையிலேயே வாழ்ந்த ஜீவாவின் மரணம் காற்றில் கலந்த பேரோசையானது.

6) **சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.**

**முன்னுரை :**

செய்தியை உரியவருக்குத் தெரிவிப்பதற்காக எழுதி அனுப்பப்படுவது கடிதமாகும். கவித்துவ இயல்பு கொண்டவை தாகூரின் கடிதங்கள்.அவர் எழுதிய சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளை இங்குக் காண்போம்

**பறவை - ஒரு மரணத்தின் வரலாறு :**

இறந்துபோன ஒரு சின்னஞ்சிறு பறவை, ஆற்றுவெள்ளத்தில் மிதந்து வருவதைப் பார்க்கிறார், தாகூர். அதன் வரலாறு பின்வருமாறு :

* ஓர் ஊரின் எல்லையில் மாமரக்கிளையில் வாழ்ந்த பறவை, இரவு நேரத்தில் தன் கூட்டிற்குத் திரும்பியது;
* அது தூங்கிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று இரவில், பத்மா ஆற்றில் வெள்ளம் வந்தது.
* கரையோர மரம் சரிந்தது ; கூட்டிலிருந்த பறவை சிதறி விழுந்தது ; இறந்துபோய் ஆற்று வெள்ளத்தில் மிதந்தது.

**நாட்டுப்புறமும் பட்டணமும் :**

* நாட்டுப்புறங்களில் இருக்கும் போது, எல்லாவற்றையும் விழுங்கவல்ல இந்த மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகிறது.
* பட்டணத்திலோ, மனித சமுதாயம்தான் மிகவும் முக்கியமானதாகத் தலைதூக்கி நிற்கிறது.

**ஐரோப்பாவும், பாரத நாடும் :**

* ஐரோப்பாவிலும் மனிதனுக்குத்தான் முக்கியமான இடம். அவர்கள் மற்ற பிராணிகளைச் சாதாரணமான உயிர்களென்றே நினைக்கிறார்கள்.
* பாரத நாட்டினர், மனிதன் விலங்காக மாறுவதையோ விலங்கு மனிதனாக மாறுவதையோ பற்றி எதுவும் தவறாக எண்ணவில்லை.
* நமது சாத்திரங்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுங்கள் என்று சொல்கிறது.

**அலட்சிய மனப்பான்மை :**

* மரங்களில் மலரும் பூக்கள் பலவற்றின் பெயர்களை, மனிதன் அறிந்திருக்கவில்லை.
* பெயர் மட்டும் தெரிந்த பல மலர்களை நாம் கண்டதும் இல்லை; தெரிந்து கொள்ளவும் முயற்சி செய்யவில்லை.
* மலரிடம் இவ்வளவு அலட்சிய மனப்பான்மை வேறு எந்த நாட்டிலும் இல்லை

**தாமஸிகம் :**

* நாகரிக வழக்கத்தில் சீக்கிரமே வாடிவிடும் மலர்களுடன் மட்டும் தொடர்பு உண்டு.
* தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும். மலர்ச்செப்பினுள் போவதும் வருவதும் தான் அவற்றின் வேலை.
* இதைத்தான் "தாமஸிகம்" என்பர். அதாவது 'பொருள் முதல் வாதம்'.
* நமது நாட்டில் உள்ள பூக்கள் அனைத்தையும் நாம் நம் மனத்தினுள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**தோல்வியின் மூல காரணம் :**

* காகம், குயில், மைனா, பௌ-கதா-கவோ போன்று, எத்தனையோ நேர்த்தியான பறவைகளின் பெயர்கள் சாதாரண மக்களுக்குத் தெரிந்திருக்காது
* இயற்கையிடம் காட்டும் இந்த அலட்சிய மனப்பான்மைதான் நம்முடைய தோல்விகளுக்கு மூலகாரணம் ஆகும்.

**முடிவுரை:**

இயற்கையை அலட்சியப் படுத்தக் கூடாது. இயற்கையோடு இணைந்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இயற்கையை நேசித்து வாழ்வில் உயர்வோம்.

## துணைப்பாடம் - 6 மதிப்பெண் வினாக்கள்

**1) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?**

**முன்னுரை**

எழுத்தாளர் அ. முத்துலிங்கம் இலங்கையில் பிறந்தவர். இப்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார். 'ஆறாம் திணை' எனும் கட்டுரையில் அவர் கூறும் செய்திகளை இங்குக் காண்போம்.

**புலம்பெயர் தமிழர்**

* இலங்கையில் நடந்த கலவரத்திலிருந்து தப்பியவர் எழுத்தாளர் முத்துலிங்கம்,
* தன் குடும்பத்துடன் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டார் .
* அங்கே உணவுக்காக கஷ்டப்பட்டார்,
* இனிமேல் இப்படி ஒரு கணம் தன் வாழ்நாளில் வரக்கூடாது என்று நினைத்துக் கொண்டு அகதியாய் கனடா நாடு சென்றார்.

**புலம்பெயர்தல்**

* புலம்பெயர்வது ஒன்றும் புதிதல்ல.
* ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம்பெயர்ந்தபடியே இருக்கிறான்.
* சங்க காலத்தில் தலைவன் பொருள் சம்பாதிக்கத் தலைவியைப் பிரிந்து செல்வான்
* சினம் கொண்ட அரசனின் கொடுமை தாங்க முடியாமல் சொந்த ஊரைவிட்டு ஓடினார்கள் மக்கள்

உலக அரங்கில் தமிழ்

* தமிழர்கள் எட்டுக்கோடிப் பேர் உலகம் முழுவதும் இருக்கிறார்கள்.
* கனடாவில் மட்டும் மூன்று லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள் .
* பிரித்தானிய அரசு - சூரியன் மறையாத அரசு
* தமிழ்ப்புலம் - சூரியன் மறையாத புலம்

ஆறாம் திணை

* ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
* ஆறாம்திணை - பனியும், பனி சார்ந்த நிலமும் என்று கூறுகிறார் முத்துலிங்கம்.

முடிவுரை

இவ்வாறு, தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு இணைக்கப்படுகிறது

**2) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

யானை டாக்டர் என்ற குறும்புதினத்தை ஜெயமோகன் எழுதியுள்ளார் . 'யானை டாக்டர்' என்று அழைக்கப்படுபவர் டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி ஆவார். இக்கதையில் மனிதர்களால் யானைக்கு ஏற்பட்ட தீங்கினையும், அதனால் யானைகள் படும் துயரையும் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஜெயமோகன்.

**யானைகளின் பண்பு :**

* தரைவாழ் விலங்குகளில் யானை, மனிதனுக்கு அடுத்தபடியாக அதிக காலம் வாழும் உயிரினமாகும்.
* ஏறத்தாழ எழுபதாண்டுகள் உயிர் வாழும்.
* யானைகள் தம் இனத்தோடு சேர்ந்து கூட்டமாக வாழும். இவை அதிக நினைவாற்றல் கொண்டவை.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**காட்டின் பயன்கள் :**

* காடுகளும், காட்டிலுள்ள விலங்குகளும் நாட்டின் செல்வமாகும். காட்டில் வாழும் உயிர்களால், காடுகளில் அரியவகை மரம் செடி கொடிகள் தழைத்து வளர்கின்றன.
* அவற்றைப் பயன்படுத்தி மனிதர்களும் மிருகங்களும் நோய்களைத் தீர்த்துக் கொள்ள முடிகிறது. பலவகைகளில் நன்மை தரும் காடுகளை மக்கள் பாதுகாக்க வேண்டும்.

**மனிதனின் செயல்கள் :**

* மனிதனின் கீழ்மையான செயல்களால், யானைகளின் மரணங்கள் நிகழ்கின்றன. சுற்றுலா என்னும் பெயரில் காட்டுக்குள் செல்பவர்கள், குடித்துவிட்டுக் குப்பிகளைத் தூக்கியெறிந்துவிடுகின்றனர். நெகிழிப் பொருள்களை வீசிவிட்டுச் செல்கின்றனர்.
* மென்மையான பாதத்தை உடைய யானைகள் அதனால் பாதிப்படைகின்றன.
* உடைந்த புட்டிகள் யானைகளின் கால்களுக்குள் சென்று , சீழ் பிடித்து, அதனால் அவை இறந்துவிடுகின்றன.

**யானை மருத்துவம் :**

* பழகிய யானைகள் அசையாமலிருந்து மருத்துவம் செய்து கொள்ளும்.
* உயிர்போகிற வலி இருந்தாலும் யானைகள் பொறுத்துக்கொள்ளும்
* கூடி வாழும் இயல்புடைய யானைகள், இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்தே இருக்கும்.

**முடிவுரை**

இவையே யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து அறியப்படும் செய்திகள் ஆகும்.

3) **வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.**

**குறிப்பு சட்டகம் :**

* கருப்புப் பிசாசு
* காளையை அடக்கத் திட்டமிடல்
* நீயா நானா போராட்டம்
* பிச்சி பெற்ற வெற்றி
* முடிவுரை

**முன்னுரை :**

வாடிவாசல்! அது துள்ளி ஓடும் காளை மாடுகளின் வாசல். தமிழர்களின் வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டில் கலந்து கொள்ளும் காளைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடும் இடம் தான் வாடிவாசல். சி.சு. செல்லப்பா எழுதியுள்ள வாடிவாசல் குறும்புதினத்தைப் பற்றி இங்குக் காண்போம்.

**ஜல்லிக்கட்டின் விதிமுறைகள் :**

இவ்விளையாட்டில் கலந்துகொள்ளும் காளைகளுக்கு எந்தத் துன்பத்தையும் கொடுக்கக்கூடாது. மனிதர்களுக்கு இரத்தம் வரலாம். ஆனால் காளைகளுக்கு ஒரு சொட்டு இரத்தம் கூட வரக்கூடாது.

**கருப்புப் பிசாசு :**

வாடிவாசலில் ஜமீன்தாரின் காளையான காரி (கருப்புப் பிசாசு) வெளியே வந்தது. அதைப் பார்த்ததும் அனைவரின் குரல்களும் நடுங்கின. வாடிபுரம் காளை கம்பீரமாக திட்டிவாசலில் வந்து நின்றது.

**காளையை அடக்கத் திட்டமிடல் :**

மருதனும் பிச்சியும் ஒருவருக்கொருவர் சைகை காட்டிக் கொண்டு காளையை அடக்க முன்வந்தனர். காளையின் கொம்புக்கு நேராகப் பிச்சியும், வால் பக்கம் மருதனும் நின்றனர்.

'டுர்ரீ' என்று குரல் கொடுத்த மருதன், காளையின் வாலைத் தொட்டுவிட்டு ஒதுங்கினான். மருதன் மீது பாய்ந்து வந்தது காளை. பிச்சி உடனே, காளையின் மீது சட்டென ஏறிப் பாய்ந்து, திமிலில் இடக்கையைப் போட்டு நெஞ்சோடு இறுக்கி, கொம்பைப் பற்றிக்கொண்டான்.

**நீயா நானா போராட்டம் :**

பிச்சியின் எதிர்பாராத பாய்ச்சல், காளைக்குப் பாதகமாகி விட்டது. ஆனாலும், சமாளித்துப் பிச்சியைக் கீழே தள்ள முயன்று உயரே தவ்வியது.

முதல் தவ்வில் பிச்சி இறுகப்பிடித்துக் கொண்டான்.

மீண்டும் இரண்டாம் முறை ஆள் உயரத்திற்குத் தவ்வியது காளை. பிச்சி தன் பிடியை விடாமல் இருந்தான்,

மூன்றாவது முறையாகக் காளை தவ்வியது. மூன்றாம் தவ்வுக்கும் அவன் தாக்குப்பிடித்துவிட்டதால், வென்றுவிட்டான் என்று கூட்டம் ஆர்ப்பரித்தது.

**பிச்சி பெற்ற வெற்றி :**

பிச்சி, காளையின் நெற்றித்திட்டில் கை போட்டு, உருமாப்பட்டை இழுத்தான். கொம்பில் கட்டியிருந்த மெடல் மற்றும் சங்கிலியுடன் பட்டுத்துணி, அவன் கைக்குக் கொத்தோடு வந்துவிட்டது. அதனை வாயில் கவ்வியபடி, தரையில் கால்பதித்து காளையை எதிர்ப்பக்கம் தள்ளிவிட்டு ஒதுங்கினான். கூட்டம் ஆர்ப்பரித்தது.

ஜமீன்தாரின் காரிக் காளையினால் பிச்சியின் தந்தை இறந்துவிட்டார். தந்தை இறப்பிற்குக் காரணமான காரியை அடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த அவன் அக்காளையை அடக்கிவிட்டான். அவன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

**முடிவுரை :**

ஜல்லிக்கட்டு என்பது மனிதனுக்கும் காளைக்கும் நடைபெறும் ஒரு உன்னத விளையாட்டு. தமிழர்களின் வீரத்தைக் காட்டும் விளையாட்டு. இது தமிழர் பண்பாட்டின் அடையாளமாக விளங்குகிறது.

**4) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?**

**முன்னுரை :**

பாரதியார், கவிஞர் மட்டும் அல்லர்! சிறந்த பேச்சாளர்; பாடகர்; கட்டுரையாளர்; கதாசிரியர்; மொழிபெயர்ப்பாளர்; அரசியல் ஞானி; ஆன்மிகவாதி; அனைத்திற்கும் மேலாகச் சிறந்த இதழாளர்.

**இதழாளர் பாரதி :**

* இதழியல் துறைக்குப் பாரதி வந்தது சாதாரண நிகழ்வாக இருக்கலாம். ஆனால் அதில் அசாதாரணமானவற்றை நிகழ்த்திக் காட்டினார்.
* **சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி (யங் இந்தியா), விஜயா, சூர்யோதயம், கர்மயோகி** ஆகிய பல இதழ்களில் ஆசிரியராகவும் துணையாசிரியராகவும் பங்காற்றினார்.
* **சர்வஜன மித்திரன், ஞானபாநு, காமன்வீல், கலைமகள், தேசபக்தன், கதாரத்னாகரம்** போன்ற இதழ்களிலும் பாரதி தம் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.

**படைப்பில் புதுமை :**

* 'தான்' என்பதை ஒழித்து, தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல், விடுதலை வேட்கையைத் தூண்டப் பல புனைபெயர்களில் எழுதினார்.
* தாம் பணியாற்றிய இதழ்களில் கருத்துடன் காட்சியும் இடம்பெற வேண்டும் என்று கருதினார்
* கருத்துப் படங்களைக் கேலிச் சித்திரங்களாக வெளியிட்டுத் தமிழ் இதழ்களில் 'கார்ட்டூன்' என்பதை அறிமுகப்படுத்தினார்.
* **இந்தியா, விஜயா** ஆகிய இரு இதழ்களிலும் கருத்துப்படங்களை வெளியிட்டுள்ளார்.

**புனை பெயர்கள் :**

* ஆங்கிலேயர்களின் கெடுபிடிகளால், விடுதலை வேட்கையூட்டும் கருத்துகள் மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று எண்ணினார், பாரதியார்.
* **இளசை சுப்ரமணியன், சாவித்திரி, சி.சு.பாரதி, வேதாந்தி, நித்திய தீரர், உத்தமத் தேசாபிமானி, ஷெல்லிதாசன், காளிதாசன், சக்திதாசன், ரிஷிகுமாரன், காசி, சரஸ்வதி, பிஞ்சுக்காளிதாசன், கிருஷ்ணன்** என்று பல புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

**புதுமை விரும்பி பாரதி :**

* தமிழ் இதழ்களில் தமிழ் மாதம், ஆண்டு குறிப்பிடும் முறையைக் கையாண்டதில் முன்னோடியாகத் திகழ்ந்தார், பாரதி.
* அதைப்போல் தமிழ் இதழ்களில் தமிழில் தலைப்பிடுவதற்கும் பாரதியே முன்னோடி. தலைப்பிடலை '**மகுடமிடல்**' என்றே பாரதியார் கூறுகின்றார்.

**முடிவுரை :**

ஆங்கிலேயர் அளித்த பல கெடுபிடிகளுக்கும் நெருக்கடிகளுக்கும் இடையிலும், இதழியல் பணியைக் கைவிடாது செயல்படுத்தினார், பாரதியார்.

## மனப்பாடச் செய்யுள்

### புறநானூறு

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.(182) - கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

பாவகை : நேரிசை ஆசிரியப்பா



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

### குறுந்தொகை

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே (146)

- வெள்ளிவீதியார்

### புரட்சிக்கவி

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்குலத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு? - பாரதிதாசன்

பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

### தொலைந்து போனவர்கள்

உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

'நான்' என்பாய் அது நீயில்லை - வெறும்
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

– அப்துல் ரகுமான்
பா வகை: சிந்துப்பா

### நன்னூல் - பாயிரம்

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.
- பவணந்தி முனிவர்

### யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.
- சு.வில்வரத்தினம்

### காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.
- பிரமிள்


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## திருக்குறள்

**Most Important**

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.
வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.
அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.
இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.
மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.
இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

**Some What Important**

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.
பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.
ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.
வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

**Least Important**

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.
யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.
தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.
தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.
மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.
தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.
வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

For all 11th Standard Study Materials, Previous Year Question Papers, Minimum Materials, One Mark Questions, Model Question Papers, Online Tests, Memory Tips, Customized Study Schedules, and Motivational Counselling and Guidance

**Contact 7358010037**



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com